# அஹிம்ஸா பரமோ தர்ம.

ஓர் அரியநூல் :— இதுவரையில் வெளிவராதது. எல்லாரும் வாசித்துணரவேண்டியதொன்று. விலை அணா 2.

2 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்கட்குச் சாதாரணத்தபாலில் அனுப்புவோம். வி. பி. யிலும் பெறலாம்.

மானேஜர் "விசால ஹிருதயம்" ஆபீஸ்,
பத்மநாபபுரம், தக்கலைப்போஸ்டு.

---

# ஞான இரகசிய சிந்தாமணி.

## ஓர் அரிய வேதாந்த நூல்.

ஆயிரக்கணக்காய்ச் செலவாகின்றது.

முந்துங்கள் ! முந்துங்கள் !!

## இதில் அடங்கிய விஷயங்கள்.

1. பிரஹ்ம லக்ஷணம்
2. ஆன்ம லக்ஷணம்
3. ஜீவாத்மா, பரமாத்மாக்களின் சம்பந்தம்
4. ஆத்மா ஒன்றே
5. மனமே மாயை
6. பூர்வ வாசனை
7. மாயை இல்லாதது
8. மகளிரே சகல துன்பத்திற்குங் காரணம்
9. சாஸ்திர ஆராய்ச்சி அவசியம்
10. ஆன்ம விசாரணை
11. சத் சங்கம்
12. போகம் விரும்பாமை
13. உலகம் மித்தையெனல்
14. ஆசை
15. அகங்காரம்
16. பந்தம்
17. ஆயுள் தூஷணம்
18. நிட்காம கர்மம்
19. வைராக்கியம்
20. தூல, சூக்கும, காரண சரீரங்கள்
21. விக்கிரக ஆராதனை
22. பரமாத்மா, ஜீவன், ஜகத், இவற்றின் உண்மை
23. ஏகனும்
24. தாபத்திரயம்
25. பஞ்சகோச விளக்கம்
26. சச்சிதானந்த இலக்கணம்
27. ஆவரண விட்சேப சக்திகள்
28. அந்தக்கரண விருத்தி
29. ஜீவன் முக்தர்களின் பேதம்

இந்நூலின் விலை அணா 8 தான்.

வி. பி. யில் வரவழைப்பது வீண்செலவாகையால் 9-அணா ஸ்டாம்பு அனுப்பினால் போதுமானது.

வி. பி. யிலும் அனுப்புவோம்.

விலாசம், மானேஜர்,
"விசால ஹிருதயம்" ஆபீஸ்,
பத்மநாபபுரம், தக்கலை P. O.

---

Registered No. M. 2084.

24 JUL 1930
31 OCT 1930

# வைத்திய சந்திரிகா

## ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி தமிழ்மாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

உள்நாடு சந்தா ரூ. 2. வெளி நாடு சந்தா ரூ. 3.

புத்தகம் 2 அக்ஷய-வருஷ ஆடிமீ பகுதி 2

## விஷய சூசிகை.

| | பக்கம். |
|---|---|
| சுதேச நூல்களில் குறைவு ஒன்றுமில்லை பத்திராதிபர் | 1 |
| நோய்க்கிடங்கொடேல் -ஸ்ரீமான் ராமசுப்பிரமணிய நாவலர் | 4 |
| சுதேச வைத்தியமுறை :— ... | 6 |
| இடாலிபட்டணத்தில் பாதிபேருக்கு தந்திரீ :— ... | 7 |
| மதிப்புரை :— ... | 8 |
| சென்னை இந்திய வைத்திய சாலை :— ... | 8 |
| வெள்ளைப்பாஷாணம் :— ... | 8 |
| வழுக்கைத்தலை :— ... | 10 |
| அயம் :— ... | 12 |
| ஔஷத சாரம் :— ... | 5 |
| வைத்திய சாரம் :— பண்டிட் நாராயண ஐயங்கார் ... | 166 |

Pandit, S. NARAYANA IYENGAR,
Editor and Publisher

விலாசம் :— வைத்தியசந்திரிகா, கரூர்.

2 July 1926 No. 2

N211, N25C
N76.2.2
9.1.57

..nted at the "Vivekabanu Press," Karur.

உ

# சுதேச நூல்களில் குறைவு ஒன்றுமில்லை.

சுதேச வைத்திய நூல்களில் குறைகள் இருப்பதாகவும் ஆகவே ஒரு வைத்தியனுக்கு வேண்டிய பூர்ண அறிவைக் கொடுக்க இயலாதவைகள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி சொல்லுபவர்கள் கூட சுதேச நூல்களில் மருந்துகளின் மேன்மையை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்கள் கூறும் குறைவுகளை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். தேகதத்வம் அல்லது உடற்கூறுசாஸ்திரம் கிடையாதென்பது ஒன்று. வியாதிகளின் காரணமாகிய பூச்சி புழுக்களின் விவரம் கிடையாதென்பது இரண்டாவது. அம்மைப்பால் முதலியவைபோன்ற விசேஷ மருந்துகள் கிடையாதென்பது மூன்றாவது. இதில் முதல் குறையைப்பற்றி பிறகு கவனிப்போம். மற்ற இருகுறைகளையும் இங்கு விசாரிப்போம். ஆங்கிலத்தில் பல வியாதிகளுக்கு காரணமாகிய பூச்சி புழுக்களின் விவரங்கள் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல வியாதிகளுக்கு பூச்சி புழுக்கள்தான் காரணமென்று ஊகிக்கப்படுகின்றன. ஆனால் அவைகளின் விவரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்றும் கண்டுபிடிக்கப்படாத இவற்றின் விவரங்களையும் ஒரு நாள் கண்டுபிடித்துவிடுவதாகவே வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஏற்படுவதென்ன? எல்லா வியாதிகளும் பூச்சிகளாலேயே உண்டாகின்றன என்று மனதிற்கு தெளிவாகத்தெரிவதுதான் பலம். இது சுதேச நூல்களால் ஏற்படவில்லையா? எல்லா வியாதிகளும் பூச்சி புழுக்களாலேயே உண்டாவதாக சுதேச நூல்கள் தீர்மானமாகக்கூறிவிட்டன. பொதுவாகக் கூறிவிட்டால் போதுமா? ஆங்கில நூல்கள்போல விவரமாகச் சொல்லவேண்டாமா என்று ஓர் கேள்வி உதிக்கும். அதற்கு சமாதானம் சொல்லுகின்றோம். இவைகளை விவரமாகத் தெரிந்துகொள்ளாமல் வியாதியைத் தெரிந்துகொண்டு அதற்கு மருந்துசெய்ய முடியுமா அல்லது முடியாதா என்றே கேட்கிறோம். அதாவது மலேரியா பூச்சியின் விவரங்களைத் தெரிந்துகொள்ளாமல் மலேரியா காய்ச்சலுக்கு ஒருவன் மருந்துகொடுக்க முடியுமா முடியாதா? முடியுமென்றால் அப்பொழுது பூச்சியின் விவரங்கள் மருந்து கொடுப்பதில் பிரயோஜனப்படவில்லையென்று ஏற்படும். முடியாதென்றால் தற்காலம் பூச்சியின் விவரங்களைத் தெரிந்துகொள்ளாமலே ஆங்கில வைத்தியர்கள் மருந்து கொடுப்பது

சரியல்லவென்று ஏற்படும். குறிகளால் மலேரியா என்று தெரிந்துகொள்வது தவிர வேறு பரீக்ஷைகளை செய்வதாக அனுபவத்தில் ஏற்படவில்லை. இந்த வழியையே சுதேச நூல்களும் அனுசரித்திருக்கின்றன. மிகுந்த சாரமான பாகத்தை சுதேசநூல்கள் போதிக்கின்றன. ஆகையால் நோய்களுக்கு மருந்து கொடுக்கும் விஷயத்தில் பிரதானமாகத் தெரியவேண்டிய விஷயங்களைமாத்திரம் விவரமாக வர்ணிக்கின்றன. இவைகளால் கியானம் பெருகுகின்றதேயன்றி சிகித்சையில் உபயோகம் ஏற்படுவதில்லை. பூச்சி விவரங்கள் தெரிந்த வியாதிகளுக்கும் பூர்ணமாக மருந்தும் கண்டுபிடித்தபாடில்லை. டாக்டர் J. W. கார்ன்வால் என்ற ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர் அவர்களும் இந்த விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். “We know a good deal about several parasitic diseases but the knowledge has not enabled us to prevent them except in isolated instances: there are too many other factors to be reckoned with.” பூச்சி புழுக்களால் உண்டாகும் பலவியாதிகளை தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் அந்த அறிவு ஒன்று இரண்டு வியாதிகளைத்தவிர மற்ற வியாதிகளைத் தடுக்கும்படி நமக்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கவில்லை. அவைகளில் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் இன்னும் பல இருக்கின்றன.

ஸால்வர்சன், டார்டார் எமடிக் போன்ற அபூர்வ மருந்துகளும் அவைகளை நேராக ரக்தத்தில் கலக்கும்படிசெய்வதுமாகிய பல அபூர்வ வித்தைகள் ஆங்கிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. வெள்ளைப்பாஷாணத்தில்செய்யும் ஓர்வகை மருந்திற்கு சால்வர்சன் எனப்பெயர். ஸ்ருமா என்றும் அஞ்சனக்கல்லென்றும் சொல்லப்படும் சுதேச சரக்கே டார்டார் எமடிக் என தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவைகள் அபூர்வமான மருந்தல்ல. சால்வர்சன் முதலிய மருந்துகளால் மேக ரோகங்கள் விலகிவிடுவதாகப் பெருமைகொள்ளப்படுகின்றது. இன்னும் பற்பல மருந்துகள் அழகான லேபிள்களுடன் கடைகளில் விற்கப்படுகின்றன. தேவாமிருதமெனவும் புகழப்படுகின்றன. இவைகளைப்பற்றி நமது டாக்டர் அவர்கள் கூறுவதாவது — “Surely it is a far more beneficial, if not actually easier, work to teach mankind how venereal diseases and all their far reaching consequences may be avoided, than to spend time in elaborating methods of alleviation, which we know to be so expensive and difficult to put into practice that not, 1% of the afflicted will ever stand a chance of really benefitting by them, and so complex that few medical men can ever learn to apply them efficiently. If you find it difficult to believe this you have only to read the report in the British Medical Journal of Sept. 24th of the proceedings of the section of Venereal Diseases of the British Medical Association, and I am sure that you will agree” மேக ரோகங்களையும் அதனால் வெகுகாலம்நீடிக்கும் கெட்டபலன்களையும் அறவே ஒழிக்கும் வழியை ஜனங்கள் நன்றாக தெரிந்துகொள்ளும்படி செய்ய வேண்டும். இது அனுபவத்தில் சற்று கடினமான கார்யமாகிலும் நிச்சயமாக மிகுந்த பலனை யளிக்கக்கூடியதே. இவ்வியாதியைத் தணிக்க நாம் கையாளும் முறைகளில் சிலவழியும் காலத்தைக்காட்டிலும் இது நல்லதே. இவ்வியாதியைத் தணிக்க நாம் கையாளும் முறையோ மிகுந்த செலவுள்ளதென்றும் அவைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவது அசாத்தியமென்றும் இந்நோயாளிகளில் நூற்றுக்கு ஒருவர்கூட இம்முறைகளால் உண்மையில் அனுகூலமடையும்படி சந்தர்ப்பமே நேருகிறதில்லையென்றும் ஆங்கில வைத்தியர்களில் ஒரு சிலரே இம்முறைகளை சாமர்த்தியமாக கையாள கற்றுக்கொள்ளும்படி அவ்வளவு சிக்கலானவையென்றும் நாமெல்லோரும் அறிந்ததே. இங்கிலாந்து ஆங்கில வைத்திய சங்கத்தினுடைய மேக ரோகப் பகுதியின் நடவடிக்கையை பிரசுரித்திருக்கும் இங்கிலாந்து பத்திரிகையைப் படித்தால் இது உண்மையென்பது விளங்கும். இதையொட்டியே மற்றொரு நிபுணர் கூறுவதாவது — Leproid — It is really a drug disease brought on by the abuse of jodides, Cod liver oil, Mercury, Arsenic, Arsenite of Sulphur, Arseno Benzol (606) etc, administered even by physicians of eminence.” லெப்ராய்ட் என்பது உண்மையில் மருந்தை சாப்பிடுவதால் உண்டாகின்றது. மேகவியாதிகளில் ஐயோடைட், காட்லீவர் ஆயில், பாதரசம், வெள்ளைப்பாஷாணம், வெள்ளைப்பாஷாணமும் கந்தகமும் கலந்தமருந்துகள், ஆர்சினோ பென்ஜோல், முதலிய (சால்வர்சன் முதலிய) மருந்துகளை உபயோகிப்பதில் இந்த மருந்துகளின் துர்குணத்தாலேயே குஷ்டம்போன்ற இந்த வியாதி உண்டாகின்றது. ஆங்கில வைத்தியத்தில் பெரிய பரீக்ஷை தேறி நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் உபயோகித்தாலும் இத்தீங்கே நேருகின்றது.” ஆங்கிலத்தில் உபயோகிக்கும் பாதரசம், வெள்ளைப்பாஷாணம் முதலியவைகளை சுதேச வைத்தியர்கள் உபயோகித்தால் தீங்கு ஒன்றும் நேருகிறதில்லை. காரண மென்ன? அவைகளை சுத்தி செய்து கெட்ட குணத்தை மாற்றுவதே.

2(C157)

# நோய்க்கிடங் கொடேல்.

உலகிற் பிறந்த மக்கட் கெல்லாம் ஏற்பட்ட வாழ்நாளோ மிகவுங் குறுகியது. அக்குறுகிய வாழ்நாளினுள்ளும் மக்களை வருத்துகின்ற நோய்களோ கணக்கில் அடங்கா. அந்நோய்கள் அம்மக்கட்கு மட்டும் நோய்களா யிலங்காமல் அவர் தம்வாழ்நாளுக்கே உற்ற நோய்களாகக் காணப்படுகின்றன. ஏனெனில், அந்நோய்களின் வாய்ப்பட்டுழல்பவர்களுக்குப் பொருளீட்டலும் அப் பொருளைக்கொண்டு அறமியற்றலும் இன்பந் துய்த்தலும் கூடாமையாலென்க. உலகத்திற் பிறந்ததனாலாம் பயனாவது இறுதியில் எல்லாம் வல்ல பரம் பொருளை அடைதலே யாதலின் அதற் கியைய ஒழுகுதலே சிறந்ததாம். அவ்வாறொழுகுதற்கு நோய்வாய்ப்பட்டார்க் கியலாதாகையால் ஒவ்வொருவரும் நோய்வாராமற் றம்மைக் காத்துக்கொள்ளுதல் இன்றியமையாததாம். இதனாலேயே "நோய்க்கிடங்கொடேல்" என அமிழ்தினுமினிய தமிழ்ப்பாவலும் ஒளவைமூதாட்டியாராற் கூறப்பட்டது.

நோய்கள் பல காரணங்களான்வரும். "அக்கேபோலங்கை யொழிய விரலழுகித்— துக்கத் தொழுநோ யெழுபவே — அக்கால்— அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற — பழவினை வந்தடைந்தக் கால்" என்பதற் கிணங்க வருகின்ற நோய்கள் 'கர்மநோய்' எனப்படும். அவைகள் முற்பிறப்புக்களிற் செய்த தீவினையா லெழுவன வாகலின் எத்தகைய மருந்துகளினாலு மொழியா. ஒருபோ தொழியினும் கர்மத்திற்கியையத் துன்புறுதற்கேற்ற பிற நோய்களேனும் வாராதொழியா. ஆதலின் அத்தகைய நோய்கட் கிடங்கொடாதிருக்கக் கருதுபவர்கள் தீயவினைகளைச் செய்யாதிருக்கக்கடவர். இனி, உணவு செயல் இவற்றின் குறைவினாலு மிகுதியினாலும் வரும் நோய்களே பொதுவாக எல்லா மக்களையும் வருத்துவனவாம். அன்றியும், அந்நோய்கள் அவற்றின் குற்றத்தானும் வரும். உணவு சீர்கேடடைந்திருப்பின் அதனை உண்டவனுக்கு உடனே நோயுண்டாதல் கண்கூடு. வயிற்று நோய் முதலியன உண்டாதற்கு சீர்கெட்ட உணவே சிறந்த காரணமாகும். செய்கைக் குற்றத்தால் பல்வித நோய்களுளவாம். அந்நோய்கள் சர்மத்தைப் பற்றியனவும் நரம்பு முதலியவற்றைப் பற்றியனவுமாம். முரட்டுத்தனமாகக் கடினவேலைகளைச் செய்யும் போழ்து மெய்ந் நரம்புகள் பிறழ்தலும் முறிதலும் நெரிதலுமுண்டாம். சிலர் மருமநோயுற்று வருந்தாவண்ணம் வருந்துதலை நாம் நேரிலேயே கண்டிருக்கிறோம். சர்மத்தின்கண் வரும் நோய்கள்



எண்ணிலடங்கா. அவையெல்லாம் செய்கைக் குற்றத்தினால் வருவனவாம்.

உணவை அளவுக்குமிஞ்சி உண்பவர்க்குப் பல்வகைப்பட்ட நோய்களு மெளிதில் உளவாம். சுவை கருதியோ பிறகாரணங்களை யெண்ணியோ அளவுக்கு மேற்பட உண்பவர்கள் தமது சிற்றின்பத்தினாலேயே பெருநோய்களைத் தாமாகவே உண்டுபண்ணிக்கொள்பவராவர். "அளவுக்கு மிஞ்சினா லமுதமும் நஞ்சு" என்னும் பழமொழியானது எத்துணை அனுபவத்தாலெழுந்தது என்பதை உற்றுக் காண்மின். பசியடங்க உண்பதே மக்கட்குணவாம். அதினு மேற்பட உண்போர் தமது உணவிற்கே உணவாவார்கள் என்க. மெய்யின் இயற்கைக்குத் தகுந்தவாறுதான் உணவினை உட்கொள்ளவேண்டும். இன்றேல், மெய்யின் இயற்கை மாறுபட்டு எண்ணரியநோய்கள் எழுகின்றன. பேருண்டி கொள்வோர்க்கு ஒருபோது மின்பமில்லாது போதலன்றித் துன்பங்களுமுண்டாகின்றன. எனவே, அவர்கள் இருவழியிலும் நன்மையில்லாதவர்களாகின்றார்கள். பேருண்டியானது எளிதின் அறாது. அவ்வாறு அறாதிருக்கவே அதன் மேலும் பேருண்டி கொள்வோர் தம்நிலைமையைப்பற்றி நாம்என்ன கூறுவது; "இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங் — கழிபே ரிரையான்கணோய்" என்பதனை ஈண்டுக் காண்க. அருந்தத் தகுந்தவுணவு அளவிற் குறையினும் பல நோய்களுண்டாம். பசியடங்க உணவு கொள்ளாவிடின் மேன்மேலும் பசிமிகுந்து வாயுவினால் துன்பமுண்டாகின்றது. அன்றியும், மெய்யினுள் அடங்கிக்கிடந்த நோய்களெல்லாம் அப்போழ்து மேற்கிளம்பி மிகுந்த துன்பத்தைக் கொடுக்கின்றன. உடம்பிற் கேற்ற உறுதியுங் கெட்டு விடுகின்றது. அதன் காரணம் நரம்பு முதலியன தளர்ச்சியுறுதலாம்.

நிற்கச், செய்கையின் குறைவினாலு மிகுதியினாலு முண்டாகு நோய்கள் எவ்வாறு எழுகின்றன என்பதை ஆராய்வாம். செய்கையென்பது தொழில் அல்லது முயற்சியாம். உடம்பு உறுதியுற்று நிலவுதற்கு உணவிற்கேற்ற செய்கையும் இன்றியமையாததாகும். வீட்டிற்குள்ளேயே யாதொரு தொழிலுஞ் செய்யாது சோம்பி இருப்பவர்கட்குத் துன்பமேயன்றி இன்பமில்லை. தொழில் செய்யாவிடின் உண்ட உணவு அறாதாகையால் அது காரணமாகப் பலநோய்கள் உண்டாகின்றன. உடம்பும் சோர்வடைகின்றது. உடம்பு சோர்வடையவே அந்தக் கரணங்களும் சோர்வடைகின்றன. உதாரணமாக, அல்லும் பகலும் வீட்டினுள்ளேயே தூங்கிக்கிடக்குஞ் சில செல்வ

வந்தர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களுடைய மனம் எப்போழ்துங் கவலைகொண்டதா யிருக்கின்றது. அவர்கள் தம்அறிவும் விசாலமடைய ஏதுவின்றி மழுங்கிப்போகின்றது. சில செல்வர்களுக்கு அளவுக்குமேற்பட்ட கவலை ஏற்படுவதற்குரிய முக்கிய காரணம் இதுவே. சோம்பலுற்றவர்களுடைய உடம்பின் உறுப்புக்கள் தமது வேலைகளைச் செய்ய வியலாத நிலைமையிலேயே இருக்கும். ஆகலின், அவர்கள் தமது வலிமையைத் தாமாகவே இழந்துகொள்கின்றார்கள். தொழிலின்மை எவ்வாறோ அவ்வாறே தொழின் மிகுதியும் துன்பத்தைக்கொடுப்பதாகும். உடம்பிற்கு ஒவ்வாதவாறு தம்மாலாகாத பெரிய செய்கைகளிலும் சிலர் நுழைந்துவிடுகின்றார்கள். இதனாலும் உடம்பின் வலிமை கெடுகின்றது. இலகுவில் உடம்பு இளைத்துப்போகின்றது. உடம்பின் உறுப்புக்கள் தமக்கொவ்வாத செய்கைகளில் மிகவும் உழைக்கவேண்டியிருத்தலான் சில பெரிய நோய்களுமுண்டாகின்றன. ஒருவனுக்குப் பத்துநாழிகை தூரமே நடந்து செல்லக்கூடுமாயின் அவன் அதற்குமேற் செல்லாதிருத்தல் நன்று. மறுத்து வெகுதூரம் நடந்து செல்வானேயாகில் அவன் நோய்வாய்ப்பட்டுழல்தல் திண்ணம். இரண்டொரு தடவைகள் தவறினும் பிற்காலத்து அத்தகையோன் நோயிற் சிக்கி உழல்வான் என்பது அனுபவத்தாலறிந்த உண்மையாகும். ஆதலின், நோய்க் கிடங்கொடாது வாழ விரும்புவோர் உணவு, செயல் என்னும் இருபகுதிக் கண்ணும் கருத்துடையவர்களாய்த் தமது உடம்பின் இயல்புக்குத் தக ஒழுகுதல் வேண்டும். ஈண்டுக் காரணம் மூவகையாகக்கூறப்பட்டதாயினும் முன்னர்க் கூறிய உணவுக்குற்றம் செய்கைக்குற்றம் என்பனவற்றில் பின்னைய இரண்டு மடங்குவளவாம்.

ராமசுப்பிரமணிய நாவலர்.
( பத்திரிகாசிரியர், “ விசாலஹிருதயம் ” )

---

## சுதேச வைத்தியமுறை.

ஜஸ்டிஸ் கோகர்நாத் மிஸ்ராவைத் தலைவராகக்கொண்டு ஐக்கியமாகாண கவர்மெண்டால் நியமிக்கப்பட்ட ஆயுர்வேத யூனானிக்கமிட்டியின் யாதாஸ்து வெளியிடப்பட்டிருக்கிறது. சுதேசவைத்தியமுறைகளை கவர்மெண்டார் அங்கீகரித்து அதற்கான உதவியைச்செய்யவேண்டுமென்றும் ஸ்தலஸ்தாபனங்கள் அதிகமான ஆயுர்வேத



யூனானி வைத்தியசாலைகளை ஏற்படுத்துமாறு செய்யவேண்டுமென்றும் காசி ஹிந்து சர்வகலாசாலையின் ஆயுர்வேத கலாசாலையை அரசாங்கத்தார் உதவி கலாசாலையாக உயர்த்தவேண்டுமென்றும் லக்ஷ்மணபுரி விக்டோரியாகஞ்சு சர்க்கார்உதவி யூனானி கலாசாலையாக உயர்த்தப்படவேண்டுமென்றும் பதிவுசெய்யப்படாத வைத்தியர்கள் தொழில்செய்வதைத் தடுக்காவிடினும் திறமைப்பரீக்ஷை ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்றும் மேற்படி கமிட்டி சிபார்சுசெய்திருக்கிறது. (சுதேச மித்திரன்.)

---

## இடாலி பட்டணத்தில் பாதிபேருக்கு தந்திரீ.

ரோமாபுரியிலிருந்துவந்த தந்தியின்படி கர்வாஸ்கோ என்ற இடாலிபட்டணத்தில் இரண்டு பக்கிரிகள் ஒரு வித்தைகாண்பித்தார்கள். நெற்றியிலும் கழுத்திலும் உள்ள சிலபாகங்களை அழுத்திப்பிடித்தால் “ தந்திரீ ” என்று சொல்லப்படுகிற ஒருவிதமான தூக்கம்போன்ற மயக்கம் உண்டாகிவிடுவதை அப்பக்கிரிகள் நிதர்சித்துக்காட்டினார்கள். இதை வேடிக்கைப்பார்த்துக்கொண்டிருந்த ஒருவன் தனது நண்பர்களுக்கு அதைச்சொல்ல அவர்கள் மற்றவர்களுக்குச்சொல்ல திடீரென்று ஒருநாள் அப்பட்டிணத்திலுள்ள ஜனங்களில் பாதிபேர் ஒருபொதுவான இடத்தில் ஒன்றுகூடி மேற்சொன்ன பரீக்ஷையைச் செய்துபார்த்தார்கள். எல்லாருக்கும் மயக்கம் வந்துவிட்டது. (சுதேச மித்திரன்.)

( வடமொழியில் தந்திரா என்று ஓர்வித மயக்கத்திற்கு பெயர் இதுவே தந்திரி என்று அழைக்கப்படலாம். ப. ர். )

---

## மதிப்புரை.

ஆனந்தபோதினியின் பனிரெண்டாவது ஆண்டு முதல்சஞ்சிகைவரப்பெற்றோம். இவ்வருஷத்திலிருந்து சஞ்சிகைக்கு பல அதிகப்பக்கங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இருபாலர்களுக்கும் ஆனந்தத்தை விளைவிக்குமாறு பல அருமையான வியாசங்கள் அமையப்பெற்றுள்ளது. இப்பத்திரிகை பனிரெண்டுவருஷம் விக்னமின்றி நடைபெறுவதிலிருந்தே இதன் உபயோகம் நன்குவிளங்குகின்றது.

தமிழ்நாடார் அனைவரும் இதனை ஆதரிப்பது அவசியம். இதன் வருஷ சந்தா ரூபாய் ஒன்றே.

விலாசம் :—
ஆனந்தபோதினி ஆபீசு,
வெங்கடேசமேஸ்திரிவீதி, சென்னை.

## சென்னை இந்திய வைத்திய கலாசாலை.

சென்னை இந்திய வைத்திய கலாசாலையில் ஆங்கில வைத்திய முறை தேவைக்கதிகமாக போதிக்கப்படுகிறதென்றும், அதன்பொருட்டு அம்முறையில் சேர்ந்தவர்கள் ஏராளமாக நியமிக்கப்பட்டு நல்ல சம்பளம் கொடுக்கப்படுகிறார்கள் என்றும் இந்திய வைத்திய முறைகளைக் கற்பிப்போருக்கு அப்படிப்பட்ட சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றும் அம்முறைகளை போதிக்க நியமிக்கப்பட்டிருப்போர் மாணவர்களுடைய பாஷையில் பேச போதுமான தேர்ச்சியற்றவர்கள் என்றும் ஒருவர் எழுதுகிறார். இந்தக்கலாசாலை நிர்வகிக்கப்படும் பான்மையைப்பற்றி விசாரிக்க அவசியமிருப்பதாகத் தெரிகிறது. இக்கலாசாலை மூலமாக மேனாட்டுமுறை கற்பிக்கப்படுகிறதா அல்லது இந்திய வைத்தியமுறை கற்பிக்கப்படுகிறதா என்று தெரியவேண்டும். இந்திய வைத்திய கலாசாலையில் இந்திய முறைகளுக்குத் துணையாக மேனாட்டு முறையையும் கற்பிக்கலாம். ஆனால் இந்த கலாசாலையில் மேனாட்டுமுறைக்கும் அதில் தேர்ச்சிபெற்றவர்களுக்கும் கௌரவ பதவியும், தேசிய முறைக்கும் அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் உபபதவியும் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சட்டசபையில் இவ்விஷயமாகக் கேள்விகள் கேட்கப்படுமா. ( சுதேசமித்திரன். )

## வெள்ளைப் பாஷாணம்.

வெள்ளைப் பாஷாணத்தை பலரூபங்களாகச் செய்து உசிதமான அளவுடன் பலவியாதிகளில் ஆங்கிலவைத்தியர்கள் உபயோகித்துவருகின்றனர். துர்பலங்களுக்கு டானிக்காகவும் கொடுத்துவருகின்றனர். சுதேச வைத்தியர்கள் அதை சுத்தப்படுத்தி பலகூட்டு மருந்துகளில் பலவியாதிகளுக்கு உபயோகிக்கின்றனர். பஸ்மம் முதலியவை



செய்தும் தனியாகவும் வியாதிக்கு உபயோகித்துவருகின்றனர். ரோகமின்றி சரீரம் சுகமாகவிருக்கும்படி கல்பமுறைகளிலும் சேருகின்றது. அதாவது கிரமப்படி பாஷாணத்தை உபயோகித்தால் வியாதி ஒன்றும் அணுகாமல் போவதுடன் நீண்ட ஆயுளையும் கொடுப்பதற்கு கல்பம் அல்லது ரசாயனம் எனப்பெயர். இந்த கல்பமுறைகள் பொய்யென்று சிலகாலத்திற்கு முந்தி பலர் நினைத்தனர். தத்காலம் கல்பமுறைகளில் கவனம்செலுத்தப்பட்டு வருகின்றது. அதில் வெள்ளைப்பாஷாணத்தைப்பற்றி ஓர் ஆங்கில நிபுணர் கூறுவதை எழுதுகிறோம். சிலர் வழக்கமாகவோ அல்லது மருந்தாகவோ வெள்ளைப்பாஷாணத்தை உபயோகிக்கின்றனர். நீண்டகாலம் உபயோகிப்பதால் அவர்கள் வாலிபர்கள்போல தோன்றுகிறார்கள். கடைசியாக தம் வயதுக்குத்தக்கவிதமாக இல்லாமல் கிழத்தனம் தணிந்தாவது போகின்றது. நெற்றியில் அதிகவயதால் உண்டாகும் மடிப்புகள் மறைந்துவிடுகின்றன. ஐரோப்பாவில் சில விவசாயிகள் வாடிக்கையாகவே பாஷாணத்தை சாப்பிட்டுவருகின்றனர். இவ்விதம் சாப்பிட்டுவருகிறவர்கள் மற்றவர்களைவிட அதிககாலம் ஜீவிக்கிறார்கள். அவர்களுக்கு அதிகவேலையால் சரீரத்தில் களைப்புஏற்படுவதில்லை. உதாரணமாக அவர்கள் வசிக்கும் இடங்களிலுள்ள உயரமான மலைகளில்கூட அதிக முயற்சியில்லாமலும் சிரமமில்லாமலும் அலக்ஷியமாகவே ஏறுகின்றனர். சரிவயதுள்ள மற்றவர்களைக்காட்டிலும் வாலிபராகவே பார்வைக்குத்தோன்றுகின்றனர். அவர்கள் இதன் உபயோகத்தால் கஷ்டமான வேலைகளைக்கூட அலக்ஷியமாகச்செய்ய முடிகிறதென்றும் சொல்லுகிறார்கள். சிறிய அளவில் மிருகங்களுக்கு உபயோகித்துப்பார்த்ததில் அவைகளின் சரீரம் பளபளப்பாகவும் அழகாகவும் ஆனதாக தெரியவருகின்றது. ஆகவே அகாலத்தில் வரும் கிழத்தனத்தையும் காலத்தில்வரும் கிழத்தனத்தையும் நிவர்த்திக்கும்படி வெள்ளைபாஷாணத்திற்கு குணம் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. தவிர பாண்டு, சோகை, சூதகவாயு முதலிய நோய்களில் அயசிந்தூரத்துடன் இதை சேர்த்துக்கொடுத்தால் மிகுந்த நன்மையுண்டாக்கும். முதிர்ந்த வயதில் சோகை, பாண்டு, ஆகிய வியாதிகளுக்கு அயசிந்தூரத்தைக் காட்டிலும் பாஷாணமே நன்மை கொடுக்கின்றது. ஸ்திரீகளுக்கு இளம்வயதில் நரம்பு துர்பலத்தால்காணும் நோய்களில் அற்புதமான குணம் காட்டியிருக்கின்றது. நோயாளியின் சரீரஎடையை அதிகரிக்கச்செய்வதுடன் ஓர் தெளிவையும் உண்டுபண்ணுகின்றது. தைராய்ட் என்ற ஓர் ஆங்கிலமருந்தில் வெள்ளைபாஷாணசத்து இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சரீரத்தில் சிறிய ரத்தகுழாய்களை நன்றாக விரியும்படிசெய்து ரக்தத்தை தாராளமாய் ஓடும்படி இது செய்கிறது. மூத்திரக்குண்டிக்காய்களை

துரிதப்படுத்தும் குணமும் இருக்கின்றது. அயசிந்தூரத்துடன் வெள்ளைப்பாஷாணத்தைச் சேர்த்து உபயோகித்தால் சிற்றின்ப உறுப்புகளை பலப்படுத்துகின்றது. கர்பபையையும் வலுப்படுத்துகின்றது. ஆண்மையிழந்த புருஷர்களுக்குத்தகுந்த அளவில்உபயோகித்தால் நன்மைசெய்யும்.

## வழுக்கைத்தலை.

### நிபுணர்களின் கருத்து.

ஆப்பிரிக்காக்காரர்களில் அனேகர் கொலைக்குற்றம் செய்கிறவர்களின் தலையை மொட்டையடித்துவிடுகிறார்கள். தலையில் மயிர் அதிகமாயிருந்தால் ஒருவன் பலசாலியென்று வெகு காலமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது; சில கொடிய மிருகங்களுக்கு மயிர் அதிகமாயிருப்பதை ஒரு திருஷ்டாந்தமாகச் சொல்லுகிறார்கள். ஆனால், மயிரில் இயற்கையாக பலம் கிடையாதென்றும், மயிர் இல்லாததற்காக பலம் குறைந்துவிடாதென்றும் நமக்குஅனுபவத்தில் தெரியும். யானைக்கு மயிர் அதிகமாயில்லை; ஆயினும் யானையின் பலம் அனைவருக்கும் தெரியும். மனிதன் முற்காலத்தில் மயிரடர்ந்து கிடந்ததாகக் கூறப்படுகிறது; ஆனால் போகப்போக மனிதர்கள் மயிரே இல்லாதவர்களாகப் போகிறார்கள்.

ஒரு தனி மயிரையெடுத்துக்கொண்டு பார்த்தால், அது நேர்த்தியாகவும், நீண்டதோர் குழாய்வடிவமாகவும் இருப்பதோடு மூன்று பிளவுள்ளதாகவும் இருக்கிறது. மனிதருடைய தோலுக்கு 3 சட்டைகள் இருப்பதுபோல் மயிருக்கும் உண்டு. பழுப்பு நிறமான மயிரையுடைய ஒருவன் தலையில் ஒரு சதுர அங்குலத்துக்கு 650 மயிர்கள் இருக்கின்றன. கறுப்பு மயிராயிருந்தால் 600 மயிர்களே இருக்கின்றன. சாதாரணமாக கறுப்பு மயிரையுடைய ஒரு ஸ்திரீயின் தலையில் மொத்தம் லட்சத்து 10 ஆயிரம் மயிர்களும், சிவப்பு மயிர்த்தலையில் 30 ஆயிரம் மயிர்களும் இருக்கின்றன.

சராசரி மாதம் 2 அங்குல நீளத்துக்கு மயிர் வளருகின்றது. மொத்தம் வளருவதற்கு 6 வருஷத்துக்குமேல் பிடிக்காது. இதன் பிறகு மயிர் விழுகிறது. புதிய மயிர் முளைக்கின்றது. நமது கண் இமையிலுள்ள மயிருக்கு 130 நாள்தான் வாழ்வு. இது பலருக்கு ஆச்சரியமாகப்படலாம். வருஷத்துக்கு 3 தடவை நம் கண்ணைச் சுற்றியுள்ள மயிர் மாறிக்கொண்டேயிருக்கிறது.

மயிர் மிகவும் இலேசான வஸ்து. மின்சார ஓட்டத்துக்கு இடங்கொடுக்கக்கூடியது. காற்றில் கலந்த பொருள்களைக் கவரும் சக்தியுடையது. சுவாசப்பைக்குச் சமானமானது. ஒருவருடைய மயிரை இன்னொருவர்மீது முளைக்கவைக்கலாம். உயிர்போனபிறகுகூட சில மணிநேரம்வரையில் மயிர் வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

தலை மயிரிலிருந்து இன்னஜாதியென்று சொல்லிவிடலாம். மயிரில் பொதுவான அமைப்பில் வித்தியாசமில்லாதபோதிலும், நீளம், உருவம், வர்ணம், முதலியவற்றை பூதக்கண்ணாடிமூலமாய்ப் பார்த்து வித்தியாசம் தெரிந்துகொண்டுவிடலாம். எந்த ஜாதிமனிதனாயிருந்தாலும், அவனுடைய மயிரைக்கொண்டு அவன் ஜாதியைக்கண்டு பிடித்துவிடமுடியும். ஒரு மயிர் அகப்பட்டால்கூட போதும். குட்டையும் சுருட்டையுமாய் உள்ள மயிர் நீக்ரோ ஜாதியின் மயிர். நீளமாகவும் சுருட்டையில்லாமலும், கரடு, முரடாகவும், உருவத்தில் உருண்டையாகவும் இருக்கிற மயிர் மங்கோலியா ஜாதியின் மயிர். சீனாக்காரர், ஜெப்பானியர், அமெரிக்க இந்தியர், முதலியவர்களுக்கு அப்படித்தானிருக்கும். ஐரோப்பியருடைய மயிர் வட்டமாகவும், கோழிமுட்டை உருவத்துடனும், செம்மட்டையாயும் இருக்கும். ஒரு மயிர் தட்டையாயிருப்பதற்கேற்றாப்போல் சுருட்டையாகவுமிருக்கும். உருண்டை வடிவமுள்ள மயிர் எப்போதும் சுருட்டை விழாது. அது கெட்டியாகவும் இருக்கும்.

தலைக்கு சதாதொப்பி, தலைப்பாகை போட்டுக்கொண்டால், மயிர் மூலமாகத்தலையைக்காப்பது அனாவசியமாகிவிமென்றுசொல்லப்படுகிறது. வரவர இதன்பலனாகத் தலையில்மயிர் குறைந்து, கடைசியில் வழுக்கையாகப் போய்விடும். மனிதனுடைய மூக்கு முன் காலத்தில் இன்னும் நன்றாகப் பெருத்து விருத்தியடைந்திருந்தது. இப்போதைப்போல் அதிகமான காரியங்களுக்கு முற்காலத்தில் மூக்கு உபயோகப்படாததே அதற்குக்காரணம். இயற்கையென்பது ஒன்றிருப்பதால், செயற்கைக்குத் தகுந்தாற்போல்அது தன்னை மாற்றிக்கொள்ளுகின்றது. வெயில் அல்லது பனி அல்லது குளிரிலிருந்து தலையைக் காப்பாற்றத் தொப்பியும் தலைப்பாகையும் இருப்பதால், மயிர் அனாவசியமென்று சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். இதைக்கேட்டுப்பலர் நடுக்கமடையலாம். ஒரு கூட்டத்தில் எல்லாரும் வழுக்கை மண்டையாக இருந்தால் அதெப்படியிருக்கும்! ஆனால் எல்லாம் பழக்கவழக்கங்களையே பொறுத்திருக்கிறது. தற்காலம் ஒருவன் உடுத்தும் துணியை முற்காலத்தவர் கண்டால் கேலி செய்யக்கூடியதாக இருக்கின்றது. அதற்காக நமது உரிமைகளைக் கைவிட்டு விடுகிறோமா? வழுக்கை மண்டை எல்லாருக்கும் [illegible]ன்று உண்டாகிவிடப்போவதில்லை. கொஞ்சம் [illegible]மாகத்தான்

அது நடக்கும். முகக்ஷவரம் செய்துகொண்டு, மீசை தாடி முதலிய எதுவும் இல்லாமல் பலர் இப்போது, இல்லையா? அதுபோல் தான் வழுக்கை மண்டையாய் இருந்தாலும் பலருக்கு ஸகஜமாகப்படும். க்ஷவரகனிடம் போய்த்தலையைக் கொடுப்பது பலருக்கு இப்பொழுதே கஷ்டமாகப்படுகிறது. அவர்களுக்கு வழுக்கைத்தலை எவ்வளவோ உபகாரமாயிருக்கும்.

நாம் வழுக்கைத் தலையாகப்போய்விட்டால் என்ன செய்வது என்று யாரும் கவலைப்படவேண்டாம். எல்லாவற்றையும் போல் அதுவும் வரக்கூடும். அதனால் யாருக்கும் நல்லதுமில்லை, கெடுதலுமில்லை, பிற்காலத்தவர் வழுக்கைத் தலையுடன் தான் இருப்பார்களாவென்று திடமாகத் தெரிந்துகொள்ள இன்னும் காலம் பிடிக்கும்.

---

## அயம்.

மனிதனின் கிழத்தனத்தை நிவர்த்திப்பதில் வெள்ளைப் பாஷாணத்திற்கு அடுத்தபடியாக அயத்தை ஆங்கிலவைத்தியரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். நமது ரக்தத்தில் கலந்திருக்கும் வஸ்துக்களில் அயமே முதன்மையானது. ரக்தத்தில் இந்த வஸ்து குறைந்துபோவதால்தான் சோகை, பாண்டு, முதலியவியாதிகள் உண்டாகின்றன. இது போன்ற பல ஆபத்தான வியாதிகளும் காணும். ரக்தத்தில் குறைந்திருக்கும் இந்த அம்சத்தை பூர்த்திசெய்ய அயத்தை உபயோகிக்க வேண்டும். அயம் சரீரத்தில் சேரும்படிசெய்ய இரண்டுவழிகளுண்டு. இயற்கையிலேயே அயம் அமையப்பெற்ற ஆகாரங்களை உட்கொள்ளுவது ஒருவழி. அல்லது அயசத்துள்ள மூலிகைகளை உட்கொள்ளுவது இரண்டாவதுவழி. இந்த இரண்டு வழிகளின்றி அயத்தைப் பஸ்ம சிந்தூரம்செய்து அப்படியே உட்கொள்ளுவதுமுண்டு. இவைகளுள் அயசத்துள்ள மூலிகைகளை உபயோகிப்பது நல்லமுறையாக கருதப்படுகின்றது. ரக்தத்தை உண்டுபண்ணும் உள் உறுப்புகளை இது துரிதப்படுத்துவதுடன் அவைகளை பலப்படுத்துவதாகவும் சொல்லப்படுகின்றது. ரக்தவிருத்திக்குகாரணமான உறுப்புகள் மஜ்ஜை என்ற தாதுவையே பொருந்திருக்கின்றன. அதாவது எலும்புகளுக்குள் இருக்கக்கூடிய ஓர்வித திரவத்திற்கு மஜ்ஜையெனப் பெயர். இதன் பலத்தைப்பொருத்தே ரக்தபலமும்இருக்கின்றது. ஆகையால் ரக்த பலத்தைபெருக்கவேண்டில் மஜ்ஜையின் பலத்தைப்பெருக்க வேண்டும். மஜ்ஜையின் பலம் பெருக்கவேண்டியிருப்பின் அப்பொழுது மஜ்ஜையின்பேரில் ஆதிக்கம் செலுத்தும் உள் உறுப்புகளை பலப்படுத்தவேண்டும். அவ்வுறுப்புகள் சரீரத்தில் பல விருப்பதாக ஆங்கில வைத்தியர் நினைக்கின்றனர். அவ்வுறுப்புகள் கிழவயதில் தளர்ச்சியடைகின்றன. அயம் கிழவயதில் தளர்ச்சியடையும் அவ்வுறுப்புகளை பலப்படுத்தி அதன்மூலமாக மஜ்ஜையையும்பலப்படுத்தி ரக்த ஓட்டத்தையும் ஒழுங்குசெய்கிறது.



2. சுதர்சன சூர்ணம்:— கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவத்தல், விரளிமஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரிவேர், முள்ளிவேர், பூலாங்கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, தேசாவரம், மருள் கிழங்கு, சீந்தில்தண்டு, சிருகாஞ்சொரிவேர், கடுகுரோகிணி, யர்பாடகம், கோரைக்கிழங்கு, மருக்கொன்னை, வெட்டிவேர், வேப்பம்பட்டை, கோஷ்டம், அதிவிடயம், வெப்பாலைப்பட்டை, ஓமம், வெப்பாலையரிசி, சிறுதேக்கு, முருங்கைவிரை, காவிக்கல், வசம்பு, லவங்கப்பட்டை, தாமரைத்தண்டு, விலாமிச்சவேர், செஞ்சந்தனம், அதிவிடையம், குருந்தொட்டிவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், வாய்விளங்கம், தகரவேர், சித்திரைமூலவேர், தேவதாரு, செவ்வியம், பேய்புடல், லவங்கம், மூங்கிலுப்பு, வெண்தாமரைக்கிழங்கு, பச்சிலை, ஜாதிபத்திரி, தாளிசபத்திரி, அமுக்கராகிழங்கு, வகைக்கு பலம் ஒன்று, நிலப்பூஷணிக்கிழங்கு பலம் இரண்டு, நிலவேம்பு பலம் 26½. இவைகளை வெய்யிலில்வைத்து இடித்து வஸ்திரகாயம்செய்துகொள்ளவும். தினம் வேளை ஒன்றுக்கு கால்தோலாமுதல் அரைத்தோலாவரையில் இரண்டு அவுன்சு பச்சைத்தண்ணீரில் கலக்கி சாப்பிடவும். இரண்டு அல்லது மூன்றுவேளை சாப்பிடலாம்.

செய் முறை:— கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவத்தல், இவைகளைத் தனித் தனியேதட்டி விதையைப் போக்கி தோலாக எடுத்துக்கொள்ளவும். முள்ளி என்பது கண்டங்கத்திரியைப்போலவேயிருக்கும். ஆனால் கண்டங்கத்திரிகொடி, முள்ளிசெடி, கண்டங்கத்திரி காயைவிட முள்ளிக்காய் பெரிதாகவும் கத்திரிக்காய் போன்றும் இருக்கும். இலை இரண்டுக்கும் ஓரேவிதமாகவிருக்கும். சீந்தில் கொடி பருமனைக்கொண்டுவந்து சிறிய பில்லைகளாக நறுக்கிக்கொள்ளவேண்டும். இது வெய்யலில்காய சிலநாள் பிடிக்கும். ஆனதால் இதை முன் ஜாக்கிரதையாக தயாரித்துக்கொள்ளவும். சிறுகாஞ்சொரியில் இரண்டுவகையுண்டு. எது கிடைத்தாலும் எடுத்துக்கொள்ளலாம். மருக்கொன்னை என்பதற்கு மயில்கொன்னையென்றும் சிட்டிமந்தாரம் என்றும் வேறுபெயர்களுண்டு. இதற்கு தெலுங்கு ரேலசெட்டு என்று பெயர். ஆங்கிலத்தில் Poinciana Pulcherrima என்று பெயர். இதற்கு ஹிந்துஸ்தானியில் த்ராயமாண் என்று பெயர். இது பேதியாகும் குணமுள்ளது. இதின் இலைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். குருந்தொட்டி, ஓரிலை, மூவிலை இவைகளின் வேர்களை மலையாளத்திலிருந்து வரவழைத்துக்கொள்ளவேண்டும். நிலப்பூஷணிக்கிழங்கு மலையாளத்தில் மொதக்கன் கிழங்கு என்று பெயர். அவ்விடத்திலிருந்தே வரவழைத்து சிறியபில்லைக

ளாக நறுக்கி வெய்யிலில் காயவைத்துக்கொள்ளவும். மற்ற சரக்குகள் பிரசித்தமானவை. இவைகளை ஒன்றுசேர்த்து இடித்து ஓர் ஜாடியில் காற்றுபோகாமல் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் :— எல்லா காய்ச்சல்களிலும் உபயோகிக்கலாம். மிகுந்த கசப்பாகவிருக்கும். பெரும்பாலும் சுதேச வைத்தியர்கள் இதையே கையாண்டுவருகிறார்கள். சூர்ணமாக உபயோகிக்கக்கூடாத காலங்களில் இதைப்போட்டு கிஷாயம் செய்தும் கொடுக்கலாம் இதை கிஷாயமாகச் செய்துகொடுக்கும் பக்ஷத்தில் பாஷாணபஸ்மத்திற்கு அனுபானமாகவும் கொடுக்கலாம். மிகுந்த நன்மை செய்யும்.

3. ஜ்வராந்தகலௌஹம் :— சித்திரை மூலவேர், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவத்தல், சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, யானைத்திப்பிலி, தேசாவரம், விலாமிச்சவேர், தேவதாரு, நிலவேம்பு, மலைதாங்கிவேர், கடுகுரோகிணி, கண்டங்கத்திரிவேர், முருங்கைவிரை, அதிமதுரம், வெப்பாலைப்பட்டை, வகைக்கு தோலா மூன்று, இடித்து வஸ்திரகாயம்செய்து அயசிந்தூரம் தோலா 60 கலந்து நீரைவிட்டு இரண்டு குன்றிமணி இடையுள்ள குளிகைகளாக உருட்டிவைத்துக்கொள்ளவும். வேளை ஒன்றுக்கு இரண்டு குளிகை வீதம் தினம் இரண்டுவேளை சாப்பிடவும்.

அனுபானம் :— வென்னீரைவிட்டு விழுங்கலாம். அல்லது காய்ச்சல் கிஷாயங்களில் ஏதாவது ஒன்றையும் வென்னீர் ஸ்தானத்தில் உபயோகிக்கலாம். குழந்தைகளுக்கு அரை குளிகை முதல் தேனில் கலக்கி கொடுக்கலாம். அதாவது ஒரு சந்தணக்கல்லில் நாலு அல்லது ஐந்து பொட்டு தேன்விட்டு குளிகையை அதில் உரைத்து நாக்கில்தடவலாம். அல்லதுமுலைப்பாலில்உரைத்துபோட்டலாம்.

குறிப்பு :— பல சுரங்களில் சுரவேகத்தால் ரக்தம் க்ஷீணமடைகின்றது. ரக்தம் க்ஷீணமடைவதால் சுரம் வலுப்படுகின்றது. அக்காலங்களில் இந்த மருந்து மிகுந்த நன்மையை விளைவிக்கும் இந்த மருந்தில் அயசிந்தூரம் சேருவதால் அதைச்செய்யும்விதம் சொல்லுகிறோம்.

அயசிந்தூரம் :— தேனிரும்பைத் தகடுகளாகத் தட்டி கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், இவைமூன்றையும் சமபாகமாகஎடுத்து தட்டி கிஷாயம் செய்து வடிகட்டிக்கொண்டு அந்த கிஷாயத்தில் அயத்தகடுகளை நெருப்பில் காய்ச்சி ஏழுதடவை தோய்க்கவும். சுத்தியாகும். பிறகு அந்த தகடுகளை அரத்தால் பொடிசெய்துகொள்ளவும்.



கடையில் கிடைக்கும் இரும்புபொடி சுத்தமானதாக இராததால் அதை எடுத்துக்கொள்ளக்கூடாது. உதியமரத்தின் பட்டையை இடித்து சார் பிழிந்துகொள்ளவேண்டும். மேற்படி பட்டையில் சாறு எடுக்கும்பொழுது ஜலத்தைத்தெளித்து ரசத்தை எடுக்கக் கூடாது. ஜலத்திற்கு பதிலாக புளித்த காடி ஜலத்தை தெளித்துக் கொள்ளவேண்டும். பட்டைகளை நன்றாக இடித்து காடி ஜலத்தை கொஞ்சம் தெளித்து மறுபடியும் நன்றாக இடித்து ரசம் பிழிந்து வடிகட்டிக்கொண்டு அரப்பொடியை கல்வத்திலிட்டு பொடி முழுகும்படி அந்த ரசத்தை ஊற்றி வெய்யிலில் வைக்கவேண்டும். இவ்விதம் மூன்று நாள் வெய்யிலில் வைக்கவேண்டும். வெய்யிலில் வைத்து ரசம் இஞ்சிவிட்டால் மறுபடியும் பொடி முழுகும்படி மேற்படி ரசத்தை விடவேண்டும். வேண்டிய ரசத்தை ஒரே தடவையில் தயாரித்து வடிகட்டி சீசாவில் பத்திரமாகவைத்துக்கொண்டு மூன்றுநாட்களுக்கும் வைத்துக்கொள்ளலாம். உடனுக்குடன் தயாரித்துக்கொள்ளவேண்டுமென்ற நிர்பந்தம் கிடையாது. மூன்றாவது நாள் சாயங்காலம் ரசம் வெய்யிலில் இஞ்சிப்போன பிறகு எடுத்துக்கொள்ளவும். பிறகு மறுநாள் அதேமாதிரி ரசம்விட்டரைத்து பில்லைதட்டவேண்டும். பஸ்ம சிந்தூரங்களில் பில்லைகள் சிறிய அளவாகவே யிருக்க வேண்டும். அதாவது ஒரு பை அல்லது காசு என்ற நாணயத்தின் உருவத்திற்கு சரியாக விருந்தால் உத்தமம். அந்த பில்லைகளை வெய்யிலில் காயவைக்கவேண்டும். நன்றாக காய்ந்தபிறகே புடமிடவேண்டும். நன்றாக காய சிலநாள் பிடித்தாலும் பாதகமில்லை. நல்ல வெய்யில் காலத்தில் ஒரே நாளில் காய்ந்துவிடும். மழைகாலங்களில் சில நாள் பிடிக்கும். பில்லைகள் நன்றாக காயாவிட்டால் சிந்தூரம் நிறம் கொடுக்காது. ஆகையால் பில்லைகள் வெங்கலம்போன்ற சப்தம் வரும்படி காயவேண்டும். பிறகு அந்த பில்லைகளை சற்று இடம் விட்டுவிட்டு பரப்பும்படி அகலமான அகல் சம்பாதித்து அதில் பில்லைகளை ஒரு வரிசையாகவைக்கவும். ஒன்றின்மேலொன்று அடுக்கக்கூடாது. பிறகு மேல் அகல் மூடி முன்சொன்னதுபோல சீலைமண் செய்யவும். சீலைமண் காயும்படி வெய்யிலில் வைக்கவும். பிறகு அசையாமல் அதை எடுத்து கஜபுடம் இடவும். நெருப்பு ஆறிய பிறகு எடுத்து பில்லைகளை கல்வத்தில்போட்டு மேற்படி ரசத்தால் அரைத்து மறுபடியும் பில்லைதட்டி முன்போல புடமிடவும். இவ்விதம் மொத்தத்தில் எட்டுபுடம் போடவும் பிறகு காடிஜலம் தெளிக்காத தனிரசத்தில் மூன்றுபுடம் போடவும். ஆகமொத்தம் பதினோறு புடம் ஆனபிறகு பில்லைகளை கல்வத்தில் நன்றாகப் பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். இந்த சிந்தூரத்தை பலவியாதிகளில் தனியாகவும்

உபயோகிக்கலாம். வேறுமுறைப்படி செய்த அயசிந்தூரத்தையும் இதில் சேர்ப்பதால் பாதகமில்லை.

4. கலிங்காதி கிஷாயம் :— வெப்பாலையரிசி, சுக்கு, கோரைக்கிழங்கு, சூரத்துநிலவேம்பு, கடுகுரோகிணி, வேப்பம்பட்டை, சீந்தில்கொடி, கொத்தமல்லி விரை, கோஷ்டம், செஞ்சந்தணம், பேப்புடல், சிறுதேக்கு, ஆடாதோடையிலை, தாமரைத்தண்டு, இவைகளைசம இடையாக எடுத்து இடித்து கிஷாயம்செய்து வேளை ஒன்றுக்கு இரண்டு அவுன்சு கிஷாயம் வீதம் மூன்றுவேளை கொடுக்கலாம்.

செய்விதம் :— இந்த கிஷாய சரக்குகளை சம இடையாக எடுத்து இடித்து ஒரு தகரடப்பி அல்லது ஜாடியில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வேளைக்கும் புதிய கிஷாயமாகப் போட்டுக் கொடுப்பது நல்லது. இல்லாவிட்டால் கிஷாயத்தைப்போட்டு வடிகட்டி சீசாவில் வைத்துக்கொண்டு உபயோகிக்கலாம். 24-மணிக்கு பிறகு அந்த கிஷாயத்தை உபயோகிக்கக்கூடாது.

5. சுரமாத்திரை :— கௌரி பாஷாணத்தைவாங்கி அதில் பாதியிடை மிளகும் உளுந்தும் இரண்டையும் சேர்த்து எருக்கம் பாலால் அரைத்து மேற்படி பாஷாண கட்டிக்கு கவசம்செய்து வெய்யிலில் நன்றாக உலர்த்தி பிறகு துணியால் சுற்றி வண்ணான் வெள்ளாவியில் வைத்து பிறகு எடுத்து கவசத்தை நீக்கி உள்ளிருக்கும் பாஷாணகட்டியை கழுவி எடுத்து அதை கோமூத்திரத்தில் ஊரவைத்து பிறகு கழுவி வெய்யிலில் வைத்து நன்றாகக் காய்ந்த பிறகு கல்வத்திலிட்டு சதுரக்கள்ளியை நெருப்பில் வாட்டி சார்பிழிந்து வடிகட்டி அந்த ரசத்தைவிட்டு நான்கு ஜாமம் அரைத்து சிறிய பாசிப்பயறுபோல உண்டை செய்து நிழலிலுலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். வேளை ஒன்றுக்கு ஒரு குளிகை விதம் தினம் இரண்டு வேளை சாப்பிடவும்.

செய்முறை :— கௌரிபாஷாணம் என்பது மஞ்சள் நிறமான ஓர் பாஷாணம். ஒரே கட்டியாக வாங்கிக்கொள்ளவும். பாஷாண இடையின் பாதி இடை மிளகும் உளுத்தம் பருப்புமெடுத்துக்கொள்ளவும். இந்த இரண்டு சரக்குகளும் தனித்தனியாக ஒவ்வொன்றும் பாஷாண இடையில் பாதி இடையுள்ளதாக இருக்கவேண்டும். உளுத்தம் பருப்பு தோலின்றி இருக்கவேண்டும். இரண்டையும் கல்வத்திலிட்டு எருக்கம் பாலால் நன்றாக மைபோல அரைக்கவேண்டும். அந்த மொத்தையின் நடுவில் பாஷாணத்தை வைக்கவேண்டும். பிறகு கடும் வெய்யிலில் காயவைக்கவேண்டும்.



இந்த வியாதி திடீரென விருத்தியாகாது. கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியாகும். பல வருஷங்கள் நீடித்திருக்கும். மூச்சுக்காற்றை உள்ளுக்கு நன்றாக இழுக்கமுடியாமற் போவதால் ரக்தம் சுத்தியாவதற்கு வழியில்லாமல் போகின்றது. அதனால் பல வியாதிகள் சம்பவிக்கும்.

சிகித்சை :— சுத்தமான காற்றுள்ள இடத்தில் இருக்கவேண்டும். ஜீர்ண சக்தி குறைந்து சரீரம் மெலிந்து போவது இவ்வியாதியின் குணமாதலால் ஜீர்ண சக்தியை நன்றாக காப்பாற்றவேண்டும். எல்லா இருமல்களிலுமே வயறு நிறைய ஆகாரத்தைத் திணிப்பது கூடாது. அதிகமாக ஆகாரத்தை உட்கொண்டால் உடனே இருமல் காணுவதும் ஆகாரத்தைக் கக்குவதுமாக இருக்கும். ஆகையால் அல்பமான அளவு ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும். அது நல்ல சரீர போஷணையைத்தரக்கூடிய, ஸாரமான வஸ்துக்களாக இருக்க வேண்டும். ஸர்பிர்குடமென்ற சிலமுறைகள் இனி க்ஷய வியாதியில் சொல்லப்போகிறோம். அவைகளையும் இங்கு உபயோகிக்கவேண்டும். புளி, காரம் இல்லாத வஸ்துக்களையே சாப்பிடவேண்டும். எல்லா இருமல்களிலும் மோர் சேர்க்காமலிருப்பது நலம். மோரை சுடவைத்து உபயோகிப்பது இரண்டாவது பக்ஷம். ஜ்வரம் இல்லாத காலங்களில் வென்னீரில் ஸ்நாநம் செய்யலாம். ஆனால் வென்னீர் இளம் சூடுகையாக இருக்கவேண்டும். பச்சைநீர் ஸ்நானம் உசிதமன்று. ஈரல்கள் காயப்பட்டிருப்பதால் இருமலால் விரணம் ஜாஸ்தியாகிவிடும். ஆகையால் இருமலைத் தணியும்படி செய்யவேண்டும். உஷ்ணமான மருந்துகளை கொடுக்கலாகாது. பால் நெய் இவைகளை புஷ்டியாக சேர்த்துக்கொள்ளலாம். கபத்தை அதிகப்படுத்தாத குளிர்ச்சி வஸ்துக்கள் உபயோகிக்கத் தக்கவைகள். குளிர்ந்த காற்று படும்படி இருக்கக்கூடாது.

அகஸ்த்ய ரசாயநம் :—பில்வவேர், நிலக்குமிழம்பழம், தழுதாழை என்கிற வாத மடக்கி, பாதிரிவேர், பெருவாகை, கண்டங்கத்திரிவேர், முள்ளிச்செடிவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், சிருநெரிஞ்சிவேர், பூனைக்காலிவேர், வெள்ளைகாக்கணட்டான்வேர், பூலாங்கிழங்கு, குருந்தொட்டிவேர், யானைதிப்பிலி, நாயுருவிவேர், தேசாவரம், சித்தரைமூலம் வேர், சிருதேக்கு, கோஷ்டம், வகைக்குதோலா 8, யவதானியம் சின்னபடி நான்கு, நல்ல கடுக்காய் 100, இவைகளை ஒரு பானையில்போட்டு சின்னபடி இருபது படி ஜலம் விட்டு அடுப்பேற்றி சிரு தீயிட்டு ஐந்துபடியாக வற்றவைத்து இறக்கி வடிகட்டி அந்த கிஷாயத்தை ஓர் இரும்பு வாணயில் விட்டு அந்த கடுக்காய்களையும் சேர்த்து வெல்லம்

21015
21015

தோலா 400 போட்டு நெய், நல்லெண்ணை வகைக்கு கால்படி விட்டு கிளறி லேகிய பதத்தில் இறக்கி அரிசி திப்பிலி வஸ்திரகாயம் செய்த பொடி தோலா 16, தேன் சின்னபடிகால் விட்டு கலக்கி ஜாடியில் பத்திரப்படுத்தவும். வேளை ஒன்றுக்கு ஒரு கடுக்காயும் ஒரு தோலா லேகியமும் இவ்விதம் தினம் இரண்டுவேளை சாப்பிட்டுவரவும்.

செய்முறை :—சரக்குகளை முதலில் நன்ருகஇடித்து ஒரு பானையில் போடவேண்டும். யவதானியத்தை இடிக்காமல் அப்படியே போடவேண்டும். நல்ல உறுதியான கடுக்காய்களை முழுதாகவே அதில் போட்டு ஜலம் விட்டு கஷாயம் செய்து வடிகட்டிக்கொள்ளவும். முழுக் கடுக்காய்களை துடைத்து எடுத்துக்கொள்ளவும். பிறகு கஷாயத்தில் கடுக்காய்களையும் வெல்லத்தையும் ஒன்று சேர்த்து அடுப்பேற்றவேண்டும். வெல்லம் பழைய வெல்லமாக இருக்கவேண்டும். நாட்டு சர்க்கரையையும் அந்த இடைக்கு உபயோகித்துக்கொள்ளலாம். பிறகு எண்ணெயையும் நெய்யையும் அதில் விட்டு கிளரவேண்டும். லேகிய பதம் வந்த பிறகு அடுப்பை விட்டு கீழே இறக்கி வைத்துக்கொண்டு அதில் திப்பிலி பொடியைத் தூவி கிளறி ஆறிய பிறகு தேனையும் விட்டு கலந்துகொள்ளவேண்டும்.

குறிப்பு :— யவம் என்பது கோதுமைபோன்ற ஓர் தானியம். காசியில் ஏராளமாக கிடைக்கின்றது. சிலர் பார்லி அரிசியை யவமென்று நினைத்திருக்கின்றனர். பார்லி அரிசி கடைகளில் கிடைக்கும். ஆனல் அதற்கும் யவத்திற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆகையால் பார்லியை உபயோகிப்பது சரியல்ல. சிலர் யவம் கிடைக்காததால் கோதுமையை உபயோகிக்கின்றனர். ஆனல் யவத்திற்கு நேர்விரோதமான குணமுள்ளது கோதுமை. ஆகையால் கோதுமையை உபயோகிப்பது பொருத்தமுள்ளதல்ல.

க்ஷயகாசம் :—க்ஷயமென்று ஓர்வியாதி இனி சொல்லப்படும். அந்த வியாதியையொட்டி பலமாக உண்டாகும் இருமலுக்கு க்ஷயகாசமெனப் பெயர். Pulmonary tuberculosis என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் க்ஷயவியாதியின் ஓர் பேதமாகிய நுரையீரல் க்ஷயத்தில் இவ்வியாதி ஒட்டிவரும். காய்ச்சல், ஜலதோஷம், முதலிய பலவியாதிகளில் இருமல்காணுவது சகஜம்தான். ஆனல் க்ஷயத்தையொட்டி வரும் இருமல் மிகவும்குரூரமானதால் அதற்குத்தனியாக க்ஷயகாசம் எனப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. க்ஷயத்தை ஒட்டிகாணும் இந்த இருமல் வியாதியில் திரிதோஷங்களும் பிரகோபத்தையடைகின்றன. அவற்றுள் வாயுவே பிரதானமாகின்று இவ்வியாதி காணு



கின்றது. க்ஷயத்திற்குச்சொல்லப்படும் காரணங்களே இந்த திரிதோஷ பிரகோபத்திற்கும் காரணமாகின்றன. இதில் வெளியேறும் கபம் மிகுந்ததுர்காற்றத்துடனும் சீழ்போலவுமிருக்கும். கபம் மஞ்சள் நிறமாகவாவது அல்லது சற்று ரக்தம்கலந்த சாயலாகவாவது இருக்கும். இரண்டு அள்ளைகளிலும் வலி கடுமையாகவிருக்கும். ஹிருதயம் அறுந்து விழுந்துவிடுவதுபோல தோன்றும். காரணமின்றி சிலசமயங்களில் உஷ்ணத்திலும் சிலசமயங்களில் குளிர்ச்சியிலும் பிரீதியுண்டாகும். உட்கொள்ளும் உணவின் அளவு குறையாவிட்டாலும்பலக்குறைவு தோன்றும். முகத்தில் பளபளப்பும் தேஜஸ்ஸும் உண்டாகும். கண்கள், பற்கள், இவைகள் பார்வைக்கு அழகாகவிருக்கும். இந்த இருமல்கண்ட சிலமாதங்களுக்குள் க்ஷய வியாதி பலமடைந்து இன்னும் பீனசம் முதலிய பலஉபத்திரவங்கள் தோன்றும்.

குறிப்பு :— முன்சொல்லிய க்ஷதகாசமும், இந்த க்ஷயகாசமும் ஆரம்பகாலமாகவிருந்தால் சௌக்கியமாகும். மாமிசம் உருக ஆரம்பித்தாலும் அந்தஅவஸ்தையிலும் குணப்படும். மாமிசம் உருகி எலும்பும் உருக ஆரம்பித்தால் வியாதி சௌக்கியமாகாது. கிழத்தனத்தில்வரும் சாமான்ய இருமல்கூட சௌக்கியமாகாது.

மருந்து :— க்ஷயவியாதியை ஒட்டிவருவதாதலால் க்ஷயவியாதியில் சொல்லப்படும் மருந்துகளை இதிலும் உபயோகிக்கலாம். அகஸ்த்ய ரசாயனம் என்ற மருந்தையும் உபயோகிக்கலாம்.

---

சுவாசம் :— மூச்சுதிணரல் ஈரல்களில் அதிக வாய்வுதங்கிவிடுவதால் உண்டாகின்றது. அதிகவேலை செய்தாலும் அல்லது அளவுக்குமீறிய உணவு முதலியவைகளாலும் மூச்சுதிணறுதல் காணும். சற்று ஒய்வு எடுத்துக்கொண்டால் தானுக விலகிவிடுமாதலால் இதை வியாதியாக கருதவில்லை.

தமகம் :— Asthma சுவாசகாசம். இதை சுவாசத்தின் ஓர் பேதமாக சுதேசநூல்கள் கூறுகின்றன. நுமோனியா என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் வியாதியும் சுவாசத்தின் பேதமாகவே சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது மூச்சுத்திணறல் என்ற லக்ஷணம் உள்ளவையனைத்தும் ஒரு பொதுப்பெயரான சுவாசம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இருமல்வியாதி (காசம்) மிகவும் அதிகமாக விருத்தியடைந்தால் தமகம் காணலாம். ஆகவே காசவியாதியுள்ளவர்களுக்கும் இது வரக்கூடும். காசவியாதியின்றியே இவ்வி

யாதி தனியாகவும் வரக்கூடும். அதிசாரம், வாந்தி, சுரம், இவ்வியாதிகள் கண்டவர்களுக்கும் தோன்றும். பாண்டு, சோகை, முதலிய வியாதிகளில் ரக்தம் கெடுவதாலும் நுரையீரல்கள் பலம் குறைந்து இவ்வியாதி தோன்றுகிறது. எலிகடி முதலிய விஷங்களால் இவ்வியாதி காணுவதுண்டு. இதில் சுரத்துடன் கலந்துவரும். நெல்சுனை முதலிய தூசிகள் சுவாசத்தின் வழியாகச்செல்லுவதாலும் உண்டாகும். புகைபடுவதாலும் நேருவதுண்டு. பேய்க்காற்றுகளில் அடிபடுவதாலும் இதுகாணும். மர்மஸ்தானங்களாகக் கருதப்படும் உள் உறுப்புகள் அதாவது ஹிருதயம், மூத்திரக்குண்டிக்காய், முதலியவைகளில்காணும் தோஷங்களாலும் இதுகாணும். மிகுந்த குளிர்ந்த ஜலம் படுவதாலும் உண்டாகும். தவிர இவ்வியாதியுள்ள குடும்பத்தில் ஜனிப்பவர்களுக்கும் காரணமின்றியே வருவதுண்டு. அவ்விதம் பரம்பரையையொட்டி வரும்பொழுது Nerves என்றநரம்புகள் சுபாவத்தாலேயே தளர்ச்சியடைந்திருப்பவர்களுக்கு விசேஷமாகக்காணுகின்றது. ஒருவம்சத்தில் பிறந்த சகோதரர்களுக்குள் இவ்விதமின்றி பலமடைந்த நரம்புள்ளவர்களுக்கு இவ்வியாதிஅதிகம்பாதிப்பதில்லை. பார்சுவவாயு, அல்லது முகவாயு, காக்கை வலிப்பு, என்ற அபஸ்மாரம் ஆகிய இவ்வியாதிகளுடன் சேர்ந்தும்வரும். ஸ்திரீகளைவிட புருஷர்களுக்கே அதிகம் காணுகின்றது. இவ்வியாதி சிறுவயதிலேயே ஆரம்பித்து ஆயுள் முழுவதும் பாதிக்கின்றது. குழந்தைகளுக்குக் கக்குவாய் இருமல்கண்டால் அனேகமாக அதையொட்டியே இவ்வியாதியும் வந்துவிடுவதுண்டு. சிலவிசேஷித்த சந்தர்ப்பங்களில் இவ்வியாதி தன்வேகத்தைக் காட்டுகின்றது. சிலசமயங்களில் ஆகாரதோஷத்தாலும் முக்கியமாக காலதோஷத்தாலுமே இவ்வியாதி வேகம்காட்டுகின்றது. மழைஜலத்தில் நனைந்தாலும் அல்லது அதை உட்கொண்டாலும் அல்லது மழைக்காற்றை சுவாசித்தாலும் பனித்துளிகள் மூச்சுக்காற்றுடன் செல்லுவதாலும் கீழ்காற்று அதாவது கிழக்குத்திக்கிலிருந்து வீசும்காற்றில் அலைவதாலும் இவ்வியாதியின் வேகம்காணும். அல்லதுகபத்தை விருத்திசெய்யும் ஆகாரங்களை உட்கொள்ளுவதாலும் விருத்தியாகும். சிலருக்கு நகரங்களின் நடுமத்தியில் வசித்தால் இதன்பாதையில்லாமலிருக்கும். எல்லாரும் துதிக்கும் ஏகாந்தவாசம் அதாவது சுத்தகாற்று வீசுகின்ற ஓர் ஒதுக்குப்புரம் போய்வசித்தால் இதன்பாதைவந்துவிடுகின்றது. ஒருநகரத்திலேயே ஒருபக்கத்தில் வசித்தால் இதன்பாதையில்லாமலும் அதேநகரத்தில் மற்றொருபக்கம் வசித்தால் இதன்பாதையும் சிலருக்கு நேரிடுகின்றது. ஒரு வீட்டிலேயே ஒரு அரையில்நுழைந்து அதன்காற்றை சுவாசித்தால் இதன்பாதையும் அதேவீட்டில் மற்றொரு அரையில் வசித்தால்



பாதையில்லாமலும் சிலருக்கு இருக்கின்றது. சிலருக்கு சிலபுஷ்பங்களின் வாசனையை ஆக்ராணித்தாலும் நெல் வைக்கோல் இவைகளின் சுனைகள் சம்பந்தித்தாலும் குதிரை, நாய், முதலியவைகள் மூத்திரம் விடும்பொழுது அதன் வாசனையாலும்கூட திடீரென இவ்வியாதி பாதிக்கத்தலைப்படுகின்றது. திடீரென்று எதிர்பாராத பயம் சோகம் முதலியவைகளால் மனதுகலங்கினால்கூட இவ்வியாதி பாதிக்கும். மூத்திரம் சரியாக இறங்காமல்போவதால் பலமானவேகம் உண்டாகும். உட்கொள்ளும் ஆகாரங்களும் இவ்வியாதியை கிளப்பிவிடுகின்றன. அதிகஅளவு உணவுகளால் வயிற்றைநிறைத்துவிட்டால்உடனே இதன்தொந்திரவு உண்டாகும். இவ்வியாதியுள்ளவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருகுறிப்பிட்டஉணவுகளால்அதிகபாதைஏற்படுகின்றது. சிலருக்கு எலுமிச்சம்பழத்தைப் பார்த்தாலும் பாதைஏற்படுகின்றது ஒரு சிலருக்கு எலுமிச்சம்பழத்தை வேண்டியவளவு உபயோகித்தாலும் பாதைஏற்படுவதில்லை. சிலர் கடுமையாக மிளகாய், மாங்காய், இவைகளை உபயோகித்தாலும் பாதிக்கப்படுவதில்லை. சிலருக்கு இவைகளால்பாதை ஏற்படுகின்றது. சிலருக்கு டீபானம் பாதகத்தையும் இதே சிலருக்கு ஆரோக்யத்தையும் விளைவிக்கின்றது. இவ்வியாதி தவராமல் ஒவ்வொரு வருஷமும் கடுமையாகக்கண்டு பலவருஷங்கள் அதேமாதிரி நீடித்திருக்குமாகில் நாள்பட்ட இவ்வியாதி emphysema என்ற க்ஷதகாசத்தை உண்டுபண்ணி அதனுடன் சேர்ந்திருக்கும். இவ்வியாதியுள்ளவர்களுக்கு அல்ப ஜலதோஷம்பிடித்தால் உடனே அந்த வியாஜத்தாலேயே இவ்வியாதி தன்கடுமையைக் காட்டும். இவ்வியாதி நாள்படவிருந்தால் கடைசியாக நாஸாரோகம் அல்லது மூக்கில்காணும் ரோகத்தையுண்டுபண்ணி அதோடு சேர்ந்திருக்கும். நாசிகா ரோகங்களில் சதைபீனசமும் மூக்கின் உள்பாகம் கொழுத்துகாணும் ஓர்வித சீழ்பீனசமும் ஆகிய இவைகளே விசேஷித்துகாணும். பொதுவாக இவ்வியாதி ராத்திரிவேளையில் ஆரம்பமாகும். சரீரம் படுக்கையில் சாய்ந்திருப்பதால் ரக்தஓட்டம் மெதுவாகின்றது. அல்லது ரக்தம் ஓடும்இடத்தில் அதிகம் தங்குகின்றது. ஆகவே இந்த சம்பவம் ராத்திரிகாலத்தில் நேருவதால் ஈரல்கள் தாக்குண்டு இவ்வியாதி உடனே தலைகாட்டுகின்றது. இந்நோயாளி சில மணிதூங்கியவுடன் மூச்சுவிட முடியாமல் திணறுவதுபோன்ற ஓர் உணர்ச்சியுடன் விழிப்பான். மார்பில் ஓர் அடைப்பு தோன்றும். உடனே மூச்சுதிணறல் அதிகரிக்கும். சுவாசத்தை உள் இழுப்பதற்கு அவசியமாக உள்ள உறுப்புகள் அதனதன் வேலைகளை கடினமாகச்செய்தும் சிலநிமிஷங்களுக்குள் நோயாளி மூச்சுவிடமுடியாமலும் உள்ளுக்கு இழுக்கமுடியாமலும் கஷ்டநிலைமைக்கு வந்துவிடுவான்.

முகம் வெளுத்துப்போகும். தோற்றம் கவலையுள்ளதாக காணப்படும். பேசமுடியாது. மிகுந்த சிரமப்பட்டு மூச்சை உள்ளுக்கு வாங்கிய போதிலும் அல்பமாகத்தான் மூச்சுச்காற்று உட்செல்லும். வெளிமூச்சுநீண்டு இருக்கும். இந்தகஷ்ட நிலைமையில் மூச்சுகணக்கு மிகவும் அதிகரிப்பதில்லை. இந்தவேகம் சிலமணி அல்லது சிலநாள்கூட நீடித்திருக்கும். இவ்வியாதி கடுமையாகவிருக்கும்போது நல்லமூச்சுகாற்று உட்செல்லாததால் காணும்குறிகள் உண்டாகும். நெற்றியில் வியர்வைத்துளிகள் உண்டாகும். நாடி துடியாக நடக்கும். கைகால்கள் ஜில்லிடும். பிராணன் போய்விடுமென்ற நிலைமைவரும் தருணத்தில் மூச்சுகாற்று சற்றுதாராளமாக உள்நுழைய ஆரம்பிக்கும். சற்று இருமல்கண்டு கபம்விழ ஆரம்பிக்கும். சிரமமிகுதியால் நித்திரைவரும். சிறிது நேரத்திற்கெல்லாம் முன்போலவே வேதனை ஆரம்பிக்கும். வேதனைகளின் மத்தியிலுள்ள காலங்களிலும் மூச்சு தாராளமாக இராது. ஹிம்சையின் ஆரம்பத்தில் வரட்டு இருமலாக இருக்கும். மிகுந்த சிரமத்துடன் இருமி கபம்வெளியேறும். இந்தவேதனை எவ்வளவுநாள் நீடித்திருக்குமென்பது நிச்சயமில்லை. சிலருக்கு 3 அல்லது 4 நாளும் சிலருக்கு ஒருவாரமும் இருப்பது உண்டு. இவ்வியாதியால் மரணம் சம்பவித்ததாகத் தெரியவில்லை.

முற்குறிகள் :— இவ்வியாதிக்கு முற்குறிகளாவன மார்பு சற்று பிகுவாக இருப்பதாகத்தோன்றும், மார்புவலி, இரண்டு அள்ளைப்பக்கங்களிலும்வலி, சற்று தங்கி தங்கி மூச்சுவிடுதல், வயிற்று உப்பிசம், நெற்றிப்பொட்டுகளில்வலி, ஆகிய இவைகளே

உண்டாகும்விதம் :— Stomach என்ற ஆமாசயம் அதாவது இரைப்பையில் வாயுஅதிகமாக முதலில் தங்குகின்றது. ஆமாசயத்தில் வாயுவு சேகரமாகாமல் இவ்வியாதியுண்டாவதில்லை. " ஆமாசய ஸமுத்பவம் " வாயுமுதலில் ஆமாசயத்தில்தங்கியே பிறகு இவ்வியாதி உண்டாகின்றது. இரைப்பையில் வாயு சேகரமாவதைத்தடுத்துவிட்டால் இவ்வியாதி உண்டாவதில்லை. இயற்கைக்கு அதிகமாகசேகரம் ஆவதால் மார்புக்குள் இருக்கும் உள் அவயவங்கள் அதாவது ஹிருதயம், சுவாசப்பை, இவைகளில் வியாபித்து ரக்த ஓட்டத்தை மந்தப்படுத்துகின்றது. சேகரமானவாயு ஹிருதயத்தையே முழுவேகத்துடன் வியாபிக்குமாகில் ஹிருதயத்தையொட்டிய பலவியாதிகள் உண்டாகலாம். சுவாசப்பைகளில் விசேஷித்து வியாபிப்பதால் அவைகளை ஒட்டியவியாதி காணுகின்றது. ஆகவே சுவாசப்பைகளில் ரக்த ஓட்டம் தாமதப்படுவதால் ரக்தத்தை ஆச்ரயித்த பித்தமும் சற்று அதிகமாகின்றது. அதிகவாயுவும் பித்தமும்



சேர்ந்து அதிமிருதுவான ஈரல்பாகங்களைத் தாக்குகின்றது. சூக்ஷ்மமான சுவாச நாடிகளுடைய நுணிபாகங்கள் இவற்றின் வேகத்தால் சற்று கனத்துக்கொள்ளுகின்றன. ஓர்வித கபம் அவைகளில் உண்டாகின்றது. ஆகவே சுவாச நாடிகளின்வழி அடைபடுகின்றது. அவைகளில் உண்டாகும்கபம் விலகியவுடன் சுவாசம் சரியாகதடையின்றி போகவர முடிகின்றது. இந்த வாயு மார்புபாகம் மாத்திரமின்றி சிரசிலும்பரவுகின்றது. சிரசு, கழுத்து, மார்புக்கூடு, இரண்டு விலாப்பக்கங்கள், ஆகியபாகங்களில் வியாபிக்கின்றது. ஆகையால் அந்தபாகங்களிலும் ஹிம்சை பரவுகின்றது.

பிரதமகம் :— இது ஒருவித சுவாசநோய். முன் வியாதியின் லக்ஷணங்களேதான் இதற்கும் இருக்கும், ஆனால் இதில் சுரமும் மூர்ச்சையும் தோன்றும். தவிர முன்வியாதி குளிர்ச்சியால் அதிகமாகும் இது குளிர்ச்சியால் தணியும். மற்ற விஷயங்கள் இரண்டிற்கும் சமானம். மருந்துகளும் சமானமே.

சிகித்சை :— இந்த வியாதியில் சிகித்சையை இரண்டு விதமாகப்பிரித்துக்கொள்ளலாம். வியாதி கடுமைகாலத்திலும் கடுமையில்லாதகாலத்திலும் ஆக இருவிதமாகின்றது. வியாதி கடுமைகாட்டும் காலத்தில் காற்றுபனி சரீரத்தில் படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் அந்த காலத்தில் பளுவான வஸ்திரங்கள் சட்டைகளை போட்டுக்கொள்ளக்கூடாது. ஏற்கனவே சுவாசமார்க்கம் சரியாக இல்லாமலிருக்கும்பொழுது பளுவான உடைகள் அதிக கஷ்டத்தையே விளைவிக்கும். ஆகையால் மெல்லிய வஸ்திரங்களை தரித்துக்கொள்ளவேண்டும். தாகம் அதிகரித்தாலும்கூட தண்ணீரை அதிகம் குடிக்கலாகாது. வென்னீர் குடிப்பதால் பாதகமில்லையென சிலர் நினைப்பது உண்டு. அது தவறு. குடிநீர் வென்னீராகவிருந்தாலும்கூட அது உட்சென்றவுடன் ஈரல்களிலும் சிரசிலும் ஏற்கனவே உத்பத்தியாகியிருக்கும் கபத்தை அதிகப்படுத்துகின்றது. ஆகையால் சுடுநீரையும் மிதமாக உபயோகிப்பதே நலம். கெட்டி ஆகாரத்தையே நிச்சேஷமாகத் தள்ளிவிடவேண்டும். கெட்டிஆகாரம் இரைப்பைக்குச் சென்றவுடன் ஏற்கனவே வாயுவால் நிறைந்து உப்பிருக்கும் இரைப்பை இன்னும் அதிகமாக கனத்துக்கொள்வதால் ஹிம்சை அதிகரிக்கும். வியாதிஹிம்சிக்கும் அறிகுறிகள் தட்டுப்பட்டவுடனேயே நோயாளிக்கு ஸ்வேதம் செய்துவைக்கவேண்டும். Steam bath என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதுதான் ஸ்வேதம். அதாவது ஆவிபிடித்தல். நோயாளியை வலைக்கண்களு

டைய ஓர் நாற்காலியில் உட்காரவைத்து நாற்காலியின் அடியில் கொதிநீர் நிறைந்த ஓர் பாத்திரத்தைவைத்து நோயாளியின் முகம் நீங்கலாக மற்றவைகளையும் நாற்காலியையும் கம்பளியால் மறைத்து அந்த ஆவிவெளியில் போகாமல் செய்தால் நோயாளியின்சரீரத்தில் வியர்வை பிறக்கும். அடிபாத்திரத்தில் சுத்தநீர் வைப்பதற்கு பதிலாக கிஷாயநீராக இருந்தால் மிகவும்நலம். பாதிரிவேர், கண்டங்கத்திரிவேர், வில்வவேர், சிறுநெரிஞ்சிவேர், இவைகளுள் ஏதாவது ஒன்றையோ அல்லது பலவற்றையோ இடித்துகிஷாயம் செய்யலாம். ஆனால் குடிகிஷாயம்போல இருக்கவேண்டிய அவசியமில்லை. இந்த சாக்குகளில் காலுபலத்தை இடித்து எட்டுபடி தண்ணீர்விட்டு நன்ருககொதிக்கவைத்து உடனே ஆவிபிடிக்கலாம். பாத்திரமும் மண் பானைவேண்டிய அவசியமில்லை. உலோகபாத்திரங்களை உபயோகிக்கலாம். பாத்திரத்தின் வாய் அகலமாக இருக்கக்கூடாது. மற்ற வியாதிகளில் நோயாளியைப் படுக்கவைத்து வேதுபிடித்தபோதிலும் இவ்வியாதியில் உட்காரவைத்தே பிடிக்கவேண்டும். இந்த வியாதியில் படுத்தால் மூச்சுவிடுவது பின்னும் கஷ்டப்படும். இவ்வியாதி கடுமையாக இருக்கும்பொழுது இக்காரியம் கஷ்டமாகத்தானிருக்கும். அப்பொழுது சற்று தணியும்சமயம்பார்த்துச் செய்யவேண்டும். இவ்வியாதியில் வேதுபிடித்தல் மிகவும் உபயோகமுள்ளது. இது இரைப்பையின் உப்பிசத்தையும் தணிப்பதுடன் பிரதானமாக நுரையீரல்களில் சுவாசநாடிகளை சோதித்து நாடிகளின் நுனிகளில் உண்டாகும் கபத்தை இளகச்செய்து அதை பக்குவப்படுத்துவதுடன் அவைகளிலுள்ள வீக்கத்தையும் கனத்தையும் குறைத்து சுவாசத்தை சரிவரப்போகும்படி செய்கின்றது. முன் சொல்லிய கிஷாயசாக்குகள் கிடைக்காவிட்டாலும்கூட அவசரங்களில் சுத்தகொதிநீரையே வைத்துக்கொள்ளலாம். உஷ்ணவஸ்துக்களால் ஒற்றிடம் கொடுப்பதும் வழக்கம். ஆனால் ஒற்றிடத்தால் வேதுபிடித்த குணம்உண்டாகாது. மார்பு பிரதேசங்களில் தைலங்களைத்தடவலாம்.

தடவும் தைலம் :— தேவதாருக்கட்டையை நன்ருக இடித்து நான்குபலம்எடுத்து ஒருசட்டியில்போட்டு சின்னப்படியில் இரண்டுபடி ஜலம்விட்டு அரைப்படியாக வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் அரைப்படிவிட்டு இரண்டுபலம் தேவதாருவை ஜலம்விட்டரைத்து அதில்கலக்கி இரும்பு வாணையில்விட்டு அடுப்பேற்றி மெழுகுபதத்திற்குச்சற்று மீறிய தைலபதத்தில் வடித்து சீசாவில் பத்திரப்படுத்தவும். வேதுபிடிக்கும் காலங்களில் இந்த தைலத்தைமார்



பில் தடவலாம். ஒற்றிடம் கொடுக்கும் காலங்களிலும் மார்பில்தடவலாம். பிறகு துணியால் துடைத்துவிடவேண்டும்.

குறிப்பு :— இந்நோயாளிகள் வியாதியின் கடுமை இருக்குமளவும் ஸ்நானம் செய்யக்கூடாது. அதிக ஒற்றிடம் கொடுத்தால் மார்பு புண்ணாகிவிடும். ஆகையால் சிலநிமிஷங்கள் கொடுத்து நிறுத்திவிடவேண்டியது. வேதுபிடிப்பதில் இவ்வித தீங்கு ஒன்றுமில்லை. காய்ச்சல் சேர்ந்திருந்தபோதிலும் வேதுகொடுக்கலாம். நன்ருக வியர்வைகண்டவுடன் நிறுத்திவிடலாம். அதாவது சுமார் 15 நிமிஷம் முதல் 20 நிமிஷம்வரை வேதுகொடுக்கலாம். காற்றில்லாத அடக்கமான அறைகளில் வேதுகொடுக்கவேண்டும். நீரில் ஆவி குறைந்துவிட்டால் ஆவியை அதிகரிக்கச்செய்யவேண்டும். அரைச்செங்கல்களை அடுப்பில் பளபளப்பாக காயவைத்து ஒன்று அல்லது இரண்டு கல்களை பாத்திரத்தில் போட்டால் உடனே ஆவி உண்டாகும். ஆவிஅதிகமானல் சரீரத்தில்உஷ்ணம் அதிகம்தாக்கும் ஆகையால் நிதானமாகச் செய்யவேண்டும். பழகின வைத்தியர்களைக்கொண்டு செய்வதேநலம். வியர்வையைத்துணியால் துடைத்துவிட்ட பிறகு காற்றுப்படாமல் சரீரத்தை கம்பளியால் சுற்றிவைக்கவேண்டும். போர்வை கனமாகத்தோன்றினல் காற்றுபடாமல் அறையில் இருப்பதேநலம். சிறுகாஞ்சொரிவேரை நன்ருகத்தட்டி பசும்பாலில்போட்டு காய்ச்சி பிறகு வடிகட்டி அந்தப்பாலைச் சேர்த்த கஞ்சிகள் உபயோகிக்கலாம். தத்கால நாகரீகத்தை அனுசரித்து காபியை உபயோகிக்கலாம். பிறகு சிறிதுநேரம் கழித்து மிருதுவாக ஒன்று அல்லது இரண்டுதடவை வாந்தியாகும்படி மருந்துகொடுக்கவேண்டும். சுரசிகிச்சையில் சொல்லிய வாந்தி மருந்துகளை உபயோகிக்கலாம். வாந்திகடுமையாக இருக்கக்கூடாது. ஆகையால் சிறிய அளவில் மருந்தைக்கொடுக்கவேண்டும். அவ்விதமே ஒன்று அல்லது இரண்டுதடவை மலம் போகும்படி செய்யலாம். இவ்வியாதியில் சிலபுகைகள் விசேஷித்த நன்மையைக் கொடுக்கின்றன. புகைபிடித்தலுக்கு தூமபானம் என வடமொழியில் பெயர்.

இவ்வியாதிக்கு புகை :— விராளிமஞ்சள், பச்சிலை, ஆமணக்குவேர், கொம்பாக்கு, மனேசிலை, தேவதாரு, தாளகம், சடாமஞ்சி, இவைகளை சமயிடையாகஎடுத்து குளிர்ந்த ஜலத்தைவிட்டு அரைத்து வத்தியாகச்செய்து நிழலில்காயவைத்து உலர்ந்தபிறகு பத்திரமாக வைத்துக்கொள்ளவும். அந்தவத்தியை நெய்யில்தோய்த்து நெருப்பு பற்றவைத்து புகைகுடிக்கவும்.

செய்முறை :— புகைசுருட்டிற்கு வர்த்தி என வடமொழியில் பெயர். அதுசெய்யும் விதம் — சாமான்களை நன்றாக வெண்ணை போல அரைத்து மொத்தையாக வைத்துக்கொள்ளவும். பெரும் நாணல் அல்லது வேல்குழாய்போன்ற குச்சியை நீளக்கணுவுள்ளதாகப்பார்த்து எடுத்து கணுக்களை நறுக்கி நடுகுச்சியைஎடுக்கவேண்டும். அந்த நடுக்குச்சி சுமார் ஆறு அங்குல நீளமுள்ளதாக எடுத்துக்கொள்ளவேண்டும். மருந்து விழுதை அந்தகுச்சியில் பருமனாக அப்பிவிடவும். அந்த குச்சியின் இரண்டு நுனிகளிலும் அரைவிரல் அளவுவிட்டு மற்றபாகங்களில் பூசவேண்டும். அந்தகுச்சி ஈரமுள்ளதாக அதாவது பச்சையாக இருக்கும்பொழுது இந்தகாரியம் செய்யவேண்டும். குச்சிகாய்ந்துவிட்டால் பிரயோஜனமில்லை. மருந்துசற்று ஈரம்காய்ந்தவுடன் மறுபடியும் அதன்மேல் மருந்தை பூசவேண்டும். மறுபடியும் காயவைக்கவேண்டும். மறுபடியும் மருந்தைபூசவேண்டும். இவ்விதம் மூன்று நான்குதடவை மருந்தைபூசவேண்டும். அதாவது அந்தகுச்சியின்மேல் பூசியமருந்து சுமார் அரைச்சுண்டிவிரல்பருமன் ஆகும் வரை மருந்தைபூசவேண்டும். ஒரேதடவையில் அந்தபருமனுக்கு பூசினால் பின்னிட்டு குழலாக வத்திவரமாட்டாது. ஆகையால் மூன்று நான்கு தடவை உலரவைத்து பூசினால்தான் ஒட்டாமல் ஒரே குழாயாகவரும். வெய்யிலில் காயவைக்கவேகூடாதென்ற நிர்பந்தம் கிடையாது. மருந்துமுழுவதும்பூசும்வரை சற்றுவெய்யிலில் வைத்து வைத்துப்பூசலாம். பிறகு மருந்துநன்றாககாய ஒருவாரம்செல்லும். நன்றாக காய்ந்த பிறகு அந்தகுச்சியின் ஒரு நுனியை பூமியில்வைத்து நடுவில் கையைவைத்து கீழ் அழுத்தினால் மருந்து குழலாக குச்சியைவிட்டு நகர்ந்துவிடும். அதாவது குச்சி தனியாகவும் மருந்து குழல் தனியாகவும் வந்துவிடும். அந்த மருந்து குழல்தான் வர்த்தி. அந்தவர்த்தியை வெய்யிலில் நன்றாக காயவைத்து பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

குறிப்பு :— இந்த வர்த்தி முழுவதும் ஒரே தடவையில் புகை பிடிக்கவேண்டிய அவசியம் இராது. வர்த்தியின் ஒரு நுனியில் எவ்வளவு வேண்டுமோ அந்த அளவுக்கு உருகின நெய்யில் தோய்த்து நெருப்பு பற்ற வைத்து புகை பிடிக்கவும். புகை பிடித்த பிறகு வர்த்தியை பூமியில் தேய்த்து நெருப்பைஅணைத்துக்கொண்டு மற்ற தடவைகளுக்கும் மீதியைவைத்துக்கொள்ளவும். புகையை வாயாலும் மூக்காலும் உறிஞ்சி பிறகு வெளிவிடும்பொழுது வாய்வழியாகவே வெளியில்விடவேண்டும். எந்த புகைகளையும் வாயால் இழுத்து மூக்கால் விடுவதால் கண் வியாதிவரும். இந்த விதியை ஒவ்வொரு



தடவையிலும் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். அவசர சமயங்களில் இவ்விதம் வர்த்திசெய்வது சாத்தியமல்ல. அப்பொழுது இந்த சரக்குகளை ஜலம்விடாமல் நன்றாகப் பொடிசெய்துகொண்டு ஒரு சிறிய பாத்திரத்தில் நெருப்பைவைத்து அதன்பேரில் கால் ரூபாயிடை பொடியைப் போட்டு ஓர் தகரக்குழாயை அதில் கவிழ்த்து அந்த புகையை முன்போல பிடிக்கலாம். வர்த்தி செய்வது அனுகூலம். தவிர மருந்தின் வேகமும் மிருதுவாயிருக்கும்.

சுவாஸ குடாரம் :—ரஸம், கந்தகம், வத்ஸநாபிக்கிழங்கு, வெண்காரம், மனோசிலை, வகைக்கு தோலா ஒன்று, மிளகு தோலா பத்து, சுக்கு, திப்பிலி, வகைக்கு தோலா இரண்டு, இவைகளை கல்வத்திலிட்டு ஜலம்விட்டு வெண்ணைபோல அரைத்து அரைசுண்டைக்காயளவு உருண்டைசெய்து வெய்யிலில் உலர்த்தி சீசாவில் பத்திரம் செய்துகொள்ளவும். வேளை ஒன்றுக்கு இரண்டு குளிகை விதம் தினம் இரண்டு வேளை உபயோகிக்கலாம்.

செய்முறை :— மனோசிலையை வேப்பிலை ரசத்தால் நன்றாக அரைத்து காயவைத்தால் சுத்தியாகும். மற்றவைகளுக்கு ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றது. வெண்காரத்தை ஒரு மண் சட்டியில்போட்டு அடுப்பில் வைத்து தீயிட்டால் பொரியும். பொரித்த வெண்காரத்தை எடுத்துக்கொள்ளவும். சுக்கு, திப்பிலி, மிளகு, ஆகிய சாமான்களை அளவுப்படி எடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொள்ளவும். கல்வத்தில் கந்தகத்தைப் போட்டு பொடிசெய்து, அதில் ரசத்தை விட்டு நன்றாக அரைக்கவேண்டும். கருப்பாக ஆகும். பிறகு மனோசிலையைச் சேர்த்து அரைக்கவேண்டும். இந்தபொடிகளை மின் வஸ்திரகாயம்செய்த பொடியுடன் சேர்த்து வைத்துவிட்டு பிறகு கல்வத்தில் நாபிக்கிழங்கைப்போட்டு முதலில் நன்றாகத் தட்டிக்கொண்டு பிறகு கொஞ்சம் ஜலத்தை விட்டு நன்றாக அரைக்கவேண்டும். வெண்ணைபோல அரைத்துக்கொண்டபிறகு மற்றப் பொடிகளையும் சேர்த்துக்கொண்டு வேண்டியவளவு பச்சை ஜலம்விட்டு முழுவதும் நன்றாக கலக்கும்படி ஒரு ஜாமம் அதாவது மூன்று மணி கல்வத்தில் அரைக்கவேண்டும். பிறகு மாத்திரை செய்துகொள்ளவும்.

தமக சுவாசத்திற்கு மருந்து :— பூஷணிக்கொடியின் வேரை உலர்த்தி பொடிசெய்து அந்த பொடியில் கால் ரூபாயிடை முதல் அரை ரூபாயிடை வரையில் வயதிற்குத் தக்கவிதமாக அளவுடன் இரண்டு அவுன்சு வென்னீரில் கலக்கி கொடுக்கவும். தினம் இரண்டு அல்லது மூன்று வேளை உபயோகிக்கலாம்.

மற்ருெரு மருந்து :— தான்றிக்காய் பொருக்கி எடுத்து தட்டி விரையை விலக்கி தோலா எண்பது எடுத்து வெள்ளாட்டு மூத்திரம் சின்னபடி நாலு விட்டு ஒரு மண் சட்டியில் போட்டு அடுப்பேற்றி ஜலம் வற்றியபிறகு அதை வெய்யிலில் காயவைத்துப் பொடிசெய்து அரை தோலா பொடியை தேனில் நன்ருகக் குழைத்து சாப்பிடவும். தினம் இரண்டு அல்லது மூன்று வேளை சாப்பிடவும்.

குறிப்பு :— தான்றிக்காய் பருமனுகவும் உளுத்துப்போகாததாகவும் இருக்கவேண்டும். அவைகளை லேசாகத்தட்டி உள் விதையை நீக்கவேண்டும். பிறகு அவைகளைப் பொடிசெய்யாமல் அப்படியே ஒரு சட்டியில் போட்டு வெள்ளாட்டு மூத்திரத்தை வடி கட்டி விடவேண்டும். பிறகு சிறு தீயிட்டு அந்த மூத்திரம் முழுவதும் அந்த தான்றிக்காயில் இஞ்சும்படிசெய்துபிறகு அவைகளை வெய்யிலில் நன்ருகக் காய்வைத்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவேண்டும். பிறகு தேனை சற்று அதிகம் விட்டு நன்ருகக் குழைத்து சாப்பிடவேண்டும். காச வியாதியில் சொன்ன கண்டகாரி லேகியத்தையும் இதில் உபயோகிக்கலாம். பிரத்மகம் என்ற மற்ருெரு வியாதியிலும் இதே சிகித்சையைச் செய்யவேண்டும்.

விச்சின்ன சுவாசம், மஹா சுவாசம், ஊர்த்வ சுவாசம். Pneumonia. நுமோனியா என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வியாதி பலவகையாக விருக்கின்றது. அதை மூன்றுவிதமாக சுதேச நூல்கள் பிரித்து லக்ஷணம் கூறுகின்றன. இவ் வியாதி காய்ச்சல் முதலிய வியாதிகளுடனுவது அவைகளுக்குப் பிந்தியாவதுவருவது வாடிக்கை. காய்ச்சல் முதலியவை ஒன்றுமில்லாமலே ஒருவருக்கு இவ் வியாதி வந்ததைப் பார்த்திருக்கிருேம். இவ்வியாதியும் ஓர் புழுவால் உண்டாவதாக ஆங்கில நூல்கள் கூறுகின்றன. முந்தி சொல்லியது போல அதிகுளிர்ச்சி, ஸந்நிபாதசுரங்கள், முதலியவைகளால் ஹிருதயம் சுவாசப்பை ஆகிய இவைகள் துர்பலமாக விருக்கும்பொழுது இவ்வியாதி தலைகாட்டுகின்றது. ஈரல்களின் பாகங்களில் உஷ்ணாக்கொதிப்பும் அதனுல் தடிப்பும் ஏற்படுகின்றது. ஈரல்களுடன் நிற்காமல் சில சமயங்களில் ஈரல்களின் மேல்ஜவ்வுகளிலும் சில சமயங்களில் மூளையையும் சில சமயங்களில் ரக்தம் முழுவதையுமே கெடுக்கின்றது. சுவாச நோய் முழுவதிலும் இருமல் காணுவது சகஜம். இதிலும் ஆரம்பத்தில் வரட்டு இருமலும் சுரமும் சேர்ந்து இருக்கும். மூச்சு துரிதப்படும். ஆரோக்ய காலத்தில் ஒரு செகண்டிற்கு 14 அல்லது 15 சுவாசம் விடுவது வழக்கம். இவ்வியாதியில் இந்த கணக்கு இருமடங்குகூட அதிகப்படலாம்

210157